

# 2017 ஆண்டறிக்கை

## நிதி ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை
# நிதி ஆணைக்குழு

## 2017

## காரியாலயம்:

இல. 03, சரண மாவத்தை,
ராஜகிரிய,
இலங்கை.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | **+94 11 2866747** |
| தொலை நகல் | : | **+94 11 2866671** |
| ஈமெயில் | : | **fincom@sltnet.lk** |
| தரவுத்தளம் | : | **www.fincom.gov.lk** |

# உள்ளடக்கம்


**தலைவரின் செய்தி** ......5

**செயலாளரின் செய்தி** ......6

**ஆணைக்குழு உறுப்பினர்கள் - 2017** ......10

**சிரேஷ்ட முகாமைத்துவ ஆளணி** ......14

**1. இலங்கை பொருளாதாரம் தொடர்பான கண்ணோட்டம்** ......15

**2. மாகாணங்களில் சமூக பொருளாதார காரணிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள்** ......18

**3. ஆட்சி மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குதல்** ......25

3.1. சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குதல் ......25

3.2. நிதி ஆணைக்குழுவின் ஆட்சி முறைக்கான வழிகாட்டல் ......27

3.3. மாகாண சபைகள் முறைமையில் நல்லாட்சி ......27

3.4. மனித வள முகாமைத்துவம் ......27

**4. நடவடிக்கைகளும் மற்றும் அடைவுகளும்** ......31

4.1. தேவை மதிப்பீடு ......31

4.2. சிபாரிசுகள் மற்றும் நிதிப் பகிர்வும் ......35

4.3. வருடாந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான மாகாண சபைகளுக்கான வழிகாட்டல்கள் ......47

4.4. மாகாண சபைகளின் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை மீளாய்வு செய்தல் ......48

4.5. ஏனைய நடவடிக்கைகள் மற்றும் அடைவுகள் ......50

4.6. நிதி ஆணைக்குழுவின் கூட்டங்கள் ......52

**5. மாகாண வருமானம்** ......53

5.1. மாகாண வருமானத்தில் மாற்றங்கள் ......53

5.2. அதிகாரம் பரவலாக்கப்பட்ட மூலங்களில் இருந்தான வருமானம ......54

5.3. மத்திய அரசாங்கத்தின் வருமானத்தில் இருந்து மாகாண சபைகளுக்கான வருமான மாற்றங்கள் ......55

**6. நிதி ஆணைக்குழுவின் நிதிச் செயலாற்றுகை** ......57

6.1. மீண்டெழும் செலவினம் ......57

6.2. மூலதனச் செலவு ......58

**7. சவால்களும் முன்னோக்கிய பாதையும்** ......60

7.1. முன்னுள்ள சவால்கள் ......60

7.2. முன்னோக்கிய பயணம் ......61

**8. நிதி அறிக்கை** ......62

**பின்இணைப்புக்கள** ......69

# அட்டவணைகள்


அட்டவணை 1 : தேசிய கணக்கு மற்றும் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் 2013 – 2017 ................16

அட்டவணை 2: சில முக்கிய சமூக பொருளாதார குறிகாட்டிகள் ..................................................................17

அட்டவணை 3 : மாகாண அடிப்படையில் சனத்தொகைஇநிலம்இமொ.உ.உஇமற்றும்மொ.உ..தலா வருமானம்- 2016 ..................................................................18

அட்டவணை 4 : மாகாண அடிப்படையில் மொ.உ.உ இல் துறை ரீதியான பங்களிப்பு 2015 - 2016..19

அட்டவணை 5 : மாகாண அடிப்படையில் தலைக்குரிய வறுமைச் சுட்டி மற்றும் வறிய குடியிருப்புக்களின் வீதம் 2012/2013 மற்றும் 2016 ..................................................................21

அட்டவணை 6 : மலசலகூட வசதிகளுடன் கூடிய வீட்டுத்தொகுதிகளின் பங்கீட்டு விதம் -2012/13 மற்றும் 2016 ..................................................................23

அட்டவணை 7: அரச பாடசாலைகள்,ஆசிரியர்கள், மாணவர்கள்,உயர்தர பரீட்சையில் தேறிய மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதிபெற்ற மாணவர்கள்- 2016 ..................................23

அட்டவணை 8: காணப்படும் மருத்துவ அதிகாரிகள் - 2015 ..................................................................24

அட்டவணை 9: சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குதல் (நல்லாட்சிக் கோட்பாடுகள்)...........25

அட்டவணை 10: நிதி ஆணைக்குழு அதிகாரிகளின் கல்வித் தகைமைகள் - 2017..................................29

அட்டவணை 11: வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோர் -2017..........................................30

அட்டவணை 12: மூலதன நிதிப் பங்கீடு- 2018 ..................................................................37

அட்டவணை 13: மொத்தக் கொடை பங்கீடு 2017-2018 ..................................................................39

அட்டவணை 14: மீண்டெழும் செலவுகளின் நிதியீட்டம் மற்றும் பாவனை 2010–2017 ..............................40

அட்டவணை 15: மாகாண மட்டத்தில் கல்வித் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)..................................................................42

அட்டவணை 16: மாகாண மட்டத்தில் சுகாதாரத் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)..................................................................43

அட்டவணை 17: மாகாண மட்டத்தில் வீதித் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)..................................................................44

அட்டவணை 18: மாகாண மட்டத்தில் விவசாயத் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)..................................................................45

அட்டவணை 19: மாகாண மட்டத்தில் கால்நடை அபிவிருத்தி துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)..................................................................45

அட்டவணை 20: இலங்கையில் நிதி ஒதுக்கீட்டில் செங்குத்தான ஏற்றத்தாழ்வுகள் - 2018......................46

அட்டவணை 21: இலங்கையில் நிதி ஒதுக்கீட்டில் கிடையான ஏற்றத்தாழ்வுகள் - 2018..........................47

அட்டவணை 22: நிதி ஆணைக்குழுக் கூட்டங்கள் - 2017 ..................................................................52

அட்டவணை 23: நாட்டை கட்டி எழுப்பும் வரி மற்றும் முத்திரை தீர்வை பகிரப்படும் வீதம்...............53

அட்டவணை 24: வருமான மூலங்களின் அடிப்படையில் மாகாண வருமான சேகரிப்பு – 2017 ...............54

அட்டவணை 25: பன்முகப்படுத்தப்பட்டமூலங்களிலிருந்து சேகரிக்கப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ள வருமானம் 2018..................................................................55

அட்டவணை 26: மத்திய அரசாங்கத்தின் வருமானத்திலிருந்து மாகாண சபைகளுக்கான மாற்றல்கள் 56

அட்டவணை 27: மீண்டெழும் செலவு 2012 - 2017 ..................................................................58

அட்டவணை 28: நிதி ஒதுக்கம் செலவு மற்றும் நிதி செயலாற்றுகை 2017..........................................59

அட்டவணை 29: முற் கணக்கு நடவடிக்கைகள்..................................................................59

# வரைபுகள்

வரைபு 1 : மாகாண அடிப்படையில் சராசரி மாதாந்த குடும்ப வருமானம் - 2012/13 - 2016 ................20
வரைபு 2 : மாகாண அடிப்படையில் வேலையற்றோர் வீதம் 2016 – 2017 ..................................................20
வரைபு 3 : மாகாண அடிப்படையில் வறுமையான குடும்பங்களின் வீதம் 2012/2013 மற்றும் 2016 .......21
வரைபு 4: பாதுகாப்பான குடி நிர் கிடைக்கப்பெறும் குடித் தொகுதிகளின் வீதம் - 2012/13 மற்றும் 2016.........22
வரைபு 5: நிறுவக கட்டமைப்பு ........................................................................................................................28
வரைபு 6: அனுமதித்த மற்றும் உண்மையில் காணப்படும் ஆளணி ...............................................................29
வரைபு 7: தொழிற்பாட்டு ஆளணியின் கல்வித் தகைமைகள் - 2017 .............................................................29
வரைபு 8: நிதி வள ஒதுக்கம்..........................................................................................................................36
வரைபு 9: மூலதன செலவினம் 2016-2017 .....................................................................................................38
வரைபு 10: மொத்தக் கொடை நிதியீட்டம் மற்றும் அதன் போக்கு 2010 - 2017.....................................40
வரைபு 11 : மீண்டெழும் செலவுஒதுக்கமமற்றும நிதி ஆணைக்குழுவின் சிபார்சு .......................................41
வரைபு 12: மீண்டெழும் செலவின் கலவை 2017 ..........................................................................................57

# தலைவரின் செய்தி

**சுயவிசாரணை மற்றும் பிரதிபலிப்புக்கான ஒரு நேரம்**

அரசியல் அமைப்பிற்கான 13ஆவது திருத்தச் சட்டத்தை தொடர்ந்து 1988ஆம் ஆண்டு இலங்கையில் நிதி ஆணைக்குழு தோற்றம் பெற்றது.

ஒரு சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை மையமாகக் கொண்டு இயங்கும் நிதி ஆணைக்குழுவானது கடந்த மூன்று தசாப்தகால வரலாற்றில் தனது கட்மைப்பாட்டை நிறைவேற்றியுள்ளதா என்பதை பகுப்பாய்வு செய்வதற்கும் சுயவிசாரணை செய்வதற்குமான சரியான நேரமாகும். ஒரு சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்துகொள்வதை நோக்காகக் கொண்டு கிடைக்கப்பெறும் நிதியினை ஆணைக்குழுவானது ஒரு நியாயமான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்ட சூத்தரத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கின்றது. எவ்வாறாயினும் பிரசுரிக்கப்பட்டுள்ள தரவுகளின்படி இது அரச நிதியில் ஒரு சொற்ப தொகையாக காணப்படுவதோடு மாகாணத்திற்குள்ளும் மற்றும் மாகாணங்களுக்கிடையிலும் பிராந்திய சமமின்மையானது தொடர்ந்து அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.. இது பிரதானமாக வளங்கள் ஒதுக்கீட்டில் காணப்படும் குறைபாடுகளாகும். இந்நிலைமையினைச் சீர் செய்யும் வகையில் நிதி ஆணைக்குழுவானது அண்மைக் காலத்தில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மூலவள மதிப்பீட்டினை மேற் கொள்ளுதல் பிரதான திட்டத்தினை தயாரித்தல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் தரவுத்தள அறிமுகம் போன்றன உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக உரிய அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் என்பனவற்றிற்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வருடாந்த அறிக்கையானது நிதி ஆணைக்குழுவின் 2017ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அடையப்பட்ட சாதனைகள் தொடர்பாக ஒரு விரிவான கணக்கறிக்கையை வழங்குகின்றது. கடந்த 2 வருடங்களாக நிதி ஆணைக்குழுவினால் முன் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் மற்றும் கடந்த வருடாந்த அறிக்கைகளில் விரிவாக கலந்தாலோசித்ததைப் போன்று ஆணைக்குழுவானது பிராந்திய ஏற்றத் தாழ்வுகளை குறைக்கும்வகையில் பல ஆய்வுகளையும் மற்றும் முனைப்புகளையும் முன்னெடுத்துள்ளது. அரசாங்கத்தின் திட்டமிடல் வரவு செலவுத்திட்டம் மற்றும் கணக்கீடுகளில் காணப்படும் குறைபாடுகள் வேறுபாடுகள், மாகாண மற்றும் நிதி ஆணைக்குழு ஆகிய இரு மட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் பொருத்தமற்ற தேவை மதிப்பீட்டு முறை என்பவற்றை உள்ளடக்கியதாகும்.



அனைத்து நடவடிக்கைகளும் உலகமயமாகிவரும் இக் காலத்தில் பிராந்திய அபிவிருத்தி கருதுகோளானது மீள் உருவாக்கப்பட்டு மீள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என அபிவிருத்தி திட்டமிடலானது வலியுறுத்துகின்றது. இது தொடர்பில் இலங்கை நிதி ஆணைக்குழுவானது ஆசியப் பிராந்தியத்தில் காணப்படும் ஏனைய நிதி ஆணைக்குழுக்களுடன் கைகோர்த்தல் வேண்டும். பிராந்திய அபிவிருத்தி தொடர்புடையதாக உருவாக்கப்பட்டுள்ள நிதி ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் குவிந்து காணப்படும் அனுபவங்களானது பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யுமுகமாக பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும்.

எமது பணியானது இலங்கையை ஒரு வளமான நாடாக மாற்றுவதற்கு இலங்கை நிதி ஆணைக்குழுவினை வடிவமைத்து வழிநடாத்துவதாகும். இதன் பொருட்டு நிதி ஆணைக்குழுவானது அதன் ஏனைய விடயங்களுக்கு இடையில் 2017ஆம் ஆண்டு டிசம்பரில் நல்லாட்சிக்கான நடத்தை விதிமுறைகளையும் அறிமுகம் செய்தது. இந் நடத்தை விதிமுறைகளுக்கு மேலதிகமாக சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல் அமைப்பு பேரவையுடன் மேற் கொள்ளப்படும் கலந்துரையாடல்கள் மற்றும் நிதி ஆணைக்குழுவுக்கான சட்டம் என்பன சிறப்பான மற்றும் வெளிப்படையான முகாமைத்துவத்திற்கு வழிவகுக்குமாதலால் அது ஆணைக்குழுவின் நீண்ட வெற்றிக்கு வழிவகுக்கும்

நிதி ஆணைக்குழு சார்பாக அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்தமைக்காக எனது உளமார்ந்த பாராட்டுக்களை முன்வைக்கின்றேன். சக ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் முகாமைத்துவ அணி மற்றும் ஏனைய ஊழியர்களின் தொடர்ச்சியான ஆதரவானது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தலைவர்
யு.எச்.பலிகக்கார

# செயலாளரின் செய்தி

**"மாகாண சபைகளின் முதலீடுகளை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒழுங்குபடுத்துதல்"**

அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தின்படி நிதி ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களாவது மாகாண சபைகளுக்கு போதுமான நிதியினை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தல் மற்றும் பிராந்திய ரீதியில் சீரான அபிவிருத்தி அடைந்து கொள்ளும் வகையில் அந்நிதியினை ஜனாதிபதியால் பகிர்ந்தளிப்பதற்கு அவசியமான கொள்கை வழிகாட்டல்களை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வதாகும்.

இச் செயற்பாட்டினை சிறப்பான முறையில் செயற்படுத்த வேண்டுமாயின், நிதி ஆணைக்குழுவானது மாகாண சபைகளின் தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மாகாண சபைகளுக்கு இணங்கிய நிதிப் பங்கீட்டுக்கான சரியான செயல்முறையினை அபிவிருத்தி செய்ய வேண்டும். மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்படும் அபிவிருதிதி முதலீடுகளை தேசிய கொள்கைகள் மற்றும் உபாயங்களுடன் ஒழுங்குபடுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு பொருத்தமான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். இதன்போது, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒழுங்குபடுத்துவதும் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இலங்கையானது 2030இல் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் கவனம் செலுத்தியுள்ளது.

ஆகவே மாகாண சபைகள் 2018ஆம் ஆண்டிற்கான தமது வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான தமது முதலீடுகளை சுட்டிக்காட்டல் வேண்டும் என நிதி ஆணைக்குழுவினால் 2017ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வழிகாட்டலில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



இதன்மூலம் ஒன்பது மாகாண சபைகளுக்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொளவதற்கு பங்களிப்புச் செய்வதற்கு ஒரு பொதுவான மேடைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டறிக்கையானது நிதி ஆணைக்குழுவின் பங்கு மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்கள் 2017ஆம் ஆண்டில் மேற்கொள்ள முன்டினடுப்புகளுடன் கூடிய கடந்தகால செயற்பாடுகள் தொடர்பான சுருக்கமான அறிக்கைகளையும் வழங்குகின்றது.

நிதி ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அதிகாரி என்றவகையில் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களால் வழங்கப்பட்ட சிறப்பான வழிகாட்டல்கள் மற்றும் ஆதரவிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மற்றும் ஆணைக்குழுவினால் எதிர்பார்க்கப்பட்ட சேவையை சிறப்பான முறையில் வழங்குவதற்கும் மற்றும் இவ் அறிக்கையைத் தயாரிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆணைக்குழுவினது ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.



செயலாளர்
ஏ.டீ.எம்.பீ.டீ தென்னகோன்

# நிதி ஆணைக்குழுவின் உருவாக்கம்

## தொலைநோக்கு

சமநிலையான பிராந்திய அபிவிருத்தியுடனான ஒரு சுபீட்சமான இலங்கை

## பணிக்கூற்று

மாகாணங்களுக்கே உரித்தான தேவைகளை அங்கீகரித்து நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்காக பொருத்தமான கொள்கைகளை சிபார்சு செய்தல்

## முதன்மை விடயங்கள்

1. நிலைபேறான மற்றும் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்துகொள்வதை நோக்காகக் கொண்டு தேவை மதிப்பீட்டை மேற்கொள்ளுதல் மற்றும் நிதி வளங்களை பகிர்ந்தளித்தல்.

2. மாகாண அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

3. தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கு அவசியமான தரவுகள் மற்றும் தகவல்களைவழங்குதல்

4. அரச நிதி ஆணைக்குழுவின் மனிதவள மற்றும் நிறுவன இயலளவை கட்டியெழுப்புதல்.

நிதி ஆணைக்குழுவானது இலங்கை ஜனநாயக சோலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம் நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை பேணுதல் மற்றும் மாகாணங்களின் அபிவிருத்திக்கு அவசியமான நிதியினை மத்திய அரசில் இருந்து மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்வதாகும்.

அரசியல் அமைப்பின் 13ஆம் திருத்தத்தில் உறுப்புரை 154(ஆர்) 3, 4, 5 மற்றும் 6இன் கீழ் நிதி ஆணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு,

1. அரசாங்கம் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மீதும் ஆலோசனையோடும் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் இருந்து மாகாணங்களின் தேவைகளை ஈடுசெய்வதற்கு போதுமான நிதியைப் பெற்றுக் கொடுத்தல்.
2. பின்வருவன தொடர்பில் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்வது ஆணைக்குழுவின் கடமையாகும்.

அ) அரசாங்கத்தினால் மாகாணங்களின் தேவைகளுக்காக ஆண்டுதோறும் எந்தக் கொள்கையின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். எனவும் மற்றும்

ஆ) ஜனாதிபதியினால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்.

இ) நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை அமைத்துக்கொள்வதை நோக்காகக் கொண்டு அவசியமான கொள்கைகளை ஆணைக்குழுவானது பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொண்டு அதாவது ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை, தனிநபர் வருமானம், சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு அவசியமான முற்போக்கான தேவை, ஒவ்வொரு மாகாணத்தினதும் தலாவருமானங்களிற்கு இடையில் காணப்படும் சமத்துவமற்ற தன்மையை குறைப்பதற்கு அவசியமான முன்யோசனைத் தேவை.

அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 ஆர் (7) கீழ் நிதி ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்ட ஒவ்வொரு பரிந்துரையையும் ''ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பார். பரிந்துரை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையையும் பாராளுமன்றத்திற்குக் அறிவிக்கப்படல் வேண்டும்''

அரசியல் அமைப்பின் கட்டளைக்கு அமைவாக, நிதி ஆணைக்குழுவானது பிராந்திய அபிவிருத்தி தொடர்பாக பின்வரும் செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ளது.

- மாகாணங்களின் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் விநியோகித்தல்.

- மாகாணங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளின் தேவையினை மதிப்பீடு செய்து மாகாணங்களுக்கு வருடாந்தம் மொத்தமாக அவசியமான தொகையை திறைசேரிக்கு பரிந்துரைத்தல்.

- மாகாண சபைகள் அதன் வருடாந்த மூலதன மற்றும் மீண்டெழும் தேவைப்பாடுகள் தொடர்பான மதிப்பீட்டை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை மாகாணங்களுக்கு வழங்குதல்.

- மாகாண அபிவிருத்தி திட்டத்தினை மீளாய்வு செய்து சாத்தியத்தன்மை, கொள்கை இணக்கப்பாடு, பிராந்திய சாத்தியத்தன்மை, மற்றும் ஒப்பீட்டு நயம் போன்றவற்றின் அடிப்படையில் அமுல்படுத்துவதற்கான அனுமதியை வழங்குதல்.

- மாகாணங்களுக்கிடையில் எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் நிதியினை பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல் மற்றும் பிராந்தியத்திற்குள் மற்றும் பிராந்தியங்களுக்கிடையில் அபிவிருத்தியில் காணப்படும் வேறுபாடுகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மாகாணங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல், அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.

- உப பிராந்திய மட்டத்திலான நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்தும் வகையில் உயர்ந்தபட்ச பதவி ஆளணியினரின் அவசியத்தை மதிப்பீடு செய்வதற்காக உரிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்.

- மாகாண அதிகாரங்கள் விசேடமாக பெறுகை நடவடிக்கைகளின் போது அரசாங்க நிதி கட்டுப்பாட்டு விதிமுறைகளை பின்பற்றி பொறுப்புக் கூறும் தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சி என்பவற்றை பின்பற்றுவதற்கு வழிநடாத்துதல்.

- உப பிராந்திய மட்டத்தில் அபிவிருத்திக்கு அவசியமான கொள்கைகள் மற்றும் உபாயங்களை உருவாக்குவதற்கு வசதியளிக்கும் வகையில் நடைமுறை பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

# ஆணைக்குழு உறுப்பினர்கள் - 2017



**திரு. யூ.எச்.பலிஹக்கார**
**தலைவர்**

**திரு. யூ.எச்.பலிஹக்கார** அவர்கள் ஒரு பட்டயக் கணக்காளர், முதலீட்டு வங்கியாளர் மற்றும் முகாமைத்துவ ஆலோசகராக 40 வருடங்களுக்கு மேலான தொழில் ரீதியான அனுபவத்தை கொண்டவராவார். அவர் வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப்பட்டத்தை இங்கிலாந்தின் பர்மின்ஹாமில் உள்ள அஸ்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் 1981 இல் முகாமைத்துவத்திற்கான பிரித்தானிய நிறுவாகத்தினால் அவரது ஆய்வறிக்கைக்கு அவ்வாண்டுக்கான சிறப்பான முகாமைத்துவ ஆய்வறிக்கை என தெரிவு செய்து விருதும் வழங்கப்பட்டது.

அவரது தொழில் முறை காலத்தில் அவர் இலங்கை மின்சார சபை, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், பீபள்ஸ் மேசர்சன்ட் வங்கி, இலங்கை மேர்ச்சன்ட் வங்கி, வரையறுத்த அக்லண்ட் காப்புறுதி நிறுவனம், இலங்கை பிணைகள் கவுன்சில், தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் முகாமைத்துவத்திற்கான பட்டப் பின்படிப்பு நிறுவனம் போன்ற அரச தனியார் நிறுவனங்களில் தலைமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். இதற்கு மேலதிகமாக ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பொதுநலவாய செயலகத்தில் நிதி முகாமைத்துவ நிபுணத்துவராகவும் செயல்பட்டுள்ளார். மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் மற்றும் ஐரோப்பிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினால் அமுல்படுத்தப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களிலும் கடமையாற்றியுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் தனது தொழில் ரீதியான கலத்தில் தலைவர் - இலங்கை தொழில் வல்லுனர் சங்கங்களின் அமைப்பு, தலைவர் - இலங்கை பட்டயக் கணக்காளர்களின் சங்கம், தலைவர் - ஐக்கிய இராச்சிய முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் இலங்கை கிளை, தலைவர் - ஐக்கிய இராச்சியம் சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கத்தின் (இலங்கை கிளை) பதவிகளை வகித்துள்ளார். இவரது சேவைகளை பாராட்டும் முகமாக 2014 இல் சிறந்த பட்டயக் கணக்காளராக வாழ்த்தப்பட்டார்.

2016 ஆம் ஆண்டில் இவர் தொழிலுக்கும் மற்றும் நாட்டிற்கும் செய்த சேவைகளை கௌரவிக்கும் முகமாக இலங்கை தொழில் வல்லுனர்களின் சங்கங்களின் அழைப்பினூடாக தேசிய முனைவர் பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

2017 ஆம் ஆண்டில்உலகலாவிய ரீதியில் சிறப்பான ஊழியர் முகாமை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு பங்களிப்பு செய்தமையை அங்கிகரித்து இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்துடன் இணைந்து இலங்கை மனித வள முகாமைத்துவ நிறுவகம் இவருக்கு "மக்கள் தலைவர் - நிதி 2017" விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை முகாமைத்துவ கணக்கீட்டுக்கான பட்டய நிறுவகம் மற்றும் தொழில் வல்லமைக்காக இவரினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான சேவை,பெறுமதி மிக்க பங்களிப்பு மற்றும் முதன்மையான தலைமைத்துவத்திற்கும் இவருக்கு 2017ஆம் ஆண்டு செப்டம்பரில் அங்கீகரிப்பு விருது வழங்கப்பட்டது.



**கலாநிதி. இந்திரஜித் குமாரசுவாமி**
**பதவிவழி உறுப்பினர்**

**கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி** 2016 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் திகதியில் இருந்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுனராக கடமையாற்றுகிறார். கலாநிதி குமாரசுவாமி அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பேரண்டப் பொருளாதாரம் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான கொள்கைகளை வகுத்தல் மற்றும் பொருளாதார ஆலோசனைகளை வழங்குவதில் 30 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார். பொதுநலவாய செயலகத்தில் பொருளாதார விடயங்கள் தொடர்பான பணிப்பாளராக செயற்பட்டுள்ளார். இவர் 1974 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரை இலங்கை மத்திய வங்கியில் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கை மத்திய வங்கியில் பொருளாதார ஆராய்ச்சி, புள்ளிவிபரவியல் மற்றும் வங்கிகள் மேற்பார்வை பிரிவுகளில் கடமையாற்றியுள்ளார். 1981 இல் இருந்து 1989 வரை அவர் இலங்கை மத்திய வங்கியில் இருந்து நிதித் திட்டமிடல் அமைச்சில் சேவையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் பொதுநலவாய அமைப்பின் செயலகத்தில் 1990 - 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் கடமையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் செயலாளர் நாயகத்தின் காரியாலயத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார விடயங்கள் பிரிவின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் குறுகிய காலத்திற்கு (ஜனவரி – ஜூலை 2010) காலப் பகுதியில் பொதுநலவாய செயலகத்தில் சமூக மாற்றம் நிகழ்ச்சித்திட்ட பிரிவின் இடைக்கால பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சின் சார்பாக பிரிட்டன் வூட்ஸ் நிறுவகம் மற்றும் ஏனைய பிரதான உதவி வழங்குனர்களுடனான பேச்சுவார்த்தைகளின் போதும் மற்றும் பேரண்ட பொருளாதாரம் மற்றும் பொருளாதார கட்டமைப்பு ரீதியான மறுசீராக்கங்கள் தொடர்பில் பிரதமர், பொருளாதார மறுசீராக்க அமைச்சுக்கு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

கலாநிதி குமாரசுவாமி அவர்கள் வரையறுத்த சர்வோதய அபிவிருத்தி நிதியில் பணிப்பாளராக பணியாற்றியுள்ளார்கள். அவர் 2011 மார்ச் முதல் 2016 ஜூலை 3 வரை வரையறுத்த டோக்கியோ சீமேந்து கம்பனியில் சுதந்திரமான பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார். இவர் 7 பெப்ரவரி 2011 இல் இருந்து 8 ஜூலை 2016 வரை வரையறுத்த ஜோன் கீல்ஸ் குழுமத்தின் மற்றும் எம்.எம்.பீ.எல் - பாத்பைண்டர் நிறுவனங்களின் இயக்குனர் சபையில் சுதந்திரமான பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். கலாநிதி குமாரசுவாமி அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்திற்கான கலைமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தையும் 1972 இல் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து 1981 இல் ஸஸெக் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தினை பெற்றுக் கொண்டார். இவர் இலங்கை தேசிய ரக்பி அணியில் சேர்ந்து அதற்கு தலைமையும் தாங்கி விளையாடியுள்ளார். 1974 இல் இவரின் தலைமையில் இலங்கை ரக்பி அணியானது ஆசிய ரக்பி போட்டியில் விளையாடியது மட்டுமல்லாமல் இவர் இலங்கையில் முதல்தர கிரிக்கட் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.



**கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
**பதவிவழி உறுப்பினர்**

**கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**அவர்கள் தற்போது திறைசேரியின் செயலாளராகவும் நிதி அமைச்சின் செயலாளராகவும் செயலாற்றுகிறார். இவருக்கு அரச துறையில் 30 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் காணப்படுகின்றது. இவர் திறைசேரியின் செயலாளர் என்ற வகையில் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையின் மற்றும் நிதி ஆணைக்குழுவின் பதவிவழியிலான உறுப்பினராக சேவையாற்றுகிறார்.

இவர் தனது தொழிலினை ஒரு இலங்கை நிர்வாக சேவையின் கெடற் அதிகாரியாக 1984ல் பொது நிர்வாக அமைச்சில் ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து அவர் 1985 இல் தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக இணைந்து கொண்டார். இவர் 2004 ஆம் ஆண்டில் இத்திணைக்களத்தின் பேரண்ட பொருளாதார திட்டமிடல் பிரிவின் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார். தொடர்ந்து 2005 ஆம் ஆண்டில் அரச இறைக் கொள்கைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாக பதவியுயர்த்தப்பட்டார்.
அதனைத் தொடர்ந்து 2006 இல் இவர் வர்த்தகம், தீர்வைகள் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் முதலாவது பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். 2008 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இவர் திறைசேரியின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2010 ஆம் ஆண்டு ஏப்ரலில் இவர் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதோடு 2012 இல் பெற்றோலிய கைத்தொழில் துறை அமைச்சின் செயலாளராகவும் 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் இவர் திறைசேரியின் செயலாளராகவும் மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

கலாநிதி சமரதுங்க பொருளாதாரத்தில் கலாநிதிப் பட்டத்தை மெல்போன் லா டிரோப் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளதோடு வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டள்ளார். மேலும் இவர் ஐக்கிய அமெரிக்காவின் விஸ் கொன்ஸின் மட்ஸின் பல்கலைக்கழகத்தில் விவசாயப் பொருளியல் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தையும் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்பு கலைமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் பல அரச துறை தொழில் முயற்சிகள் மற்றும் அரசுடன் தொடர்புபட்ட கம்பனிகளிலும் இயக்குனர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார். அவையாவன, இலங்கை மின்சார சபை, இலங்கை வங்கி, வரையறுத்த மிஹின் லங்கா விமான சேவை, வரையறுக்கப்பட்ட தனியார் டீ லாறு கரன்ஸி அன்ட் ஸிகுரியுட்டி கம்பனி, இலங்கை முறிகள் மற்றும் பிணைகள் ஆணைக்குழு, இலங்கை காப்புறுதிகள் சபை, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், முகாமைத்துவத்திற்கான பட்டப் பின் படிப்பு நிறுவகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், விவசாயத்திற்கான பட்டப் பின் படிப்பு நிறுவகம், பேராதனைப் பல்கலைகழகம், இதற்கு மேலதிகமாக இவர் காபன் நிதியத்தின் தலைவராகவும் மற்றும் 2009 – 2010 காலப்பகுதியில் வரியியலுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.



**திரு வீ. கனகசபாபதி**
**உறுப்பினர்**

**திரு வீ. கனகசபாபதி** அவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் ஹாவாட் பல்கலைக்கழகத்தின் வியாபார முகாமைத்துவத்திற்கான முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் பொது நிதி கணக்காளர் சங்கம், மற்றும் இலங்கை சான்றிதழ் அளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் ஆகியவற்றின் உறுப்பினராகக் காணப்படுகிறார். மேலும் இவர் லண்டன் பொது நிதிகள் கணக்காளர்கள் பட்டய நிறுவகத்தின் உறுப்பினராகவும் காணப்படுகிறார்.

இவர் தற்போது வரையறுத்த ஹோட்டல் அபிவிருத்தி பொதுக் கம்பனிகள் (முழுமையான அரச உரிமையான ஹில்டன் ஹோட்டல்) ஆலோசகராகவும் காணப்படுகிறார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் பொதுத்துறை பிரிவாகக் காணப்படும் பொது நிதி கணக்காளர்களின் சங்கத்தின் தலைவராகவும் காணப்படுகிறார்.

இவர் பொதுத்துறை கணக்கியல் நியமங்கள் குழுவின் தலைவராகவும் மற்றும் அரசாங்க மற்றும் பொதுத்துறை தொழில் முயற்சிகள் கணக்கியல் குழுவின் தெற்காசிய பிராந்திய மன்றத்தின் உறுப்பினராகவும் செயற்படுகிறார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவக கவுன்சில் உறுப்பினர் மற்றும் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கவுன்சிலின் உறுப்பினராகவும் சேவையாற்றுகிறார். திரு. கணகசபாபதி நிதித் திட்டமிடல் அமைச்சின் நிதி முகாமைத்துவ ஆலோசகராகவும் மற்றும் கணக்கியல் கற்கைகளுக்கான கல்வியகத்தின் சிரேஷ்ட நிதியியல் ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளார். இவருக்கு பொதுத்துறையில் பல சிரேஷ்ட மட்டத்திலான 40 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் காணப்படுவதோடு இறுதியாக திறைசேரியின் பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றி இளைப்பாறினார். இதற்கு மேலதிகமாக நிதித் திட்டமிடல் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ மறுசீரமைப்பு இணைப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

இவர் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை மேர்ச்சன்ட் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி மற்றும் பல அரச தொழில் முயற்சிகளின் பணிப்பாளர் சபை உறுப்பினராக சேவையாற்றியுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் அசோசியேட்டஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடட்டின் இயக்குனர் / நிதி ஆலோசகராகவும் மற்றும் வரையறுத்த ஹோட்டல் டிவலப்மன்ட் (லங்கா) நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.



**பேராசிரியர் எச்.எம். ஸபருல்லாஹ்**
**உறுப்பினர்**

பேராசிரியர்எச்.எம். ஸபருல்லாஹ் ஹரீட் மொஹமட் ஸபருல்லாஹ் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையில் விஷேட சித்தி பெற்ற பட்டதாரியாவார். மற்றும் அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். இவர் ஒரு கல்வியாளராகவும் சட்டத்தரணியாகவும் காணப்படுகின்றார். இவர் சர்வதேச ரீதியாக பொதுச் சட்டம் மற்றும் வங்கிகள் மற்றும் வர்த்தக சட்டத்துறையில் சர்வதேச ரீதியாக பிரசித்தி பெற்ற ஒரு சட்டத்தரணியாவார். இவருக்கு பொதுச் சட்டத்தின் ஐந்து பிரிவுகள் தொடர்பில் கற்பித்தலில் விஷேட சிறப்புத் தேர்ச்சி காணப்படுகின்றது. இவருக்கு கொழும்பு பல்கலைக்கழகம், மனிக்ஸ் கல்லூரி, மொனாஷ் பல்கலைக்கழகம், மலாயா பல்கலைகழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைகழகம், சிங்கப்பூர் நன்யங் தொழினுட்ப பல்கலைக்கழகம், மற்றும் ஹொங்கொஹ் சிட்டி பல்கலைக்கழகம் என்பவற்றில் பட்ட மற்றும் பட்டப் பின் படிப்பு மட்டத்திலான சட்ட மற்றும் சட்டமல்லா மாணவர்களுக்கும் கற்பித்தல் தொடர்பான சிறந்த தேர்ச்சி காணப்படுகின்றது. இவர் பல ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். மற்றும் இலங்கையின் தற்போதைய அரசியல் சாசனம் தொடர்பான முதலாவது ஆய்வுத் தொடரின் ஆசிரியரும் ஆவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ ஆளணி

## செயலாளர்

- திரு. ஏ.டீ.எம்.யூ.டீ.பீ. தென்னகோன்

## முகாமைத்துவ குழு

- திரு. எஸ்.எம்.ஆர்.எஸ். பண்டார - பணிப்பாளர்
- திரு. எம்.எல்.ஏ. சந்திரதாச - பணிப்பாளர
- திரு.ஆர் ஏ.எஸ்.கே ரணஸிங்க - பிரதம கணக்காளர்
- திருமதி. பிரஷாந்த் - பணிப்பாளர்
- திருமதி. ஏஸ்.என் சஞ்ஜீவனி - பணிப்பாளர்
- திருமதி. டீ.எஸ். குணவர்தன - கணக்காளர்
- திருமதி. ஏ.டப்லியு.கே.எஸ. ரணசிங்க - உள்ளக கணக்காய்வாளர்
- திருமதி. டீ.பீ.ஈ.என். குணசேகர - உதவிப் பணிப்பாளர
- திரு. பீ.ஆர்.என். சுஜீவ - உதவிப் பணிப்பாளர்
- திருமதி. டி. அபேசேகர - உதவிப் பணிப்பாளர



**இடமிருந்து வலமாக**

**முன்வரிசை:** திரு. ஆர்.ஏ.எஸ்.கே.ரணஸிங்க (பிரதமகணக்காளர்) திரு. எஸ்.எம்.ஆர்.எஸ். பண்டார (பணிப்பாளர்) திரு. யூ.எச்.பலிஹகார (தலைவர்), திரு. ஏ.ரி.எம்.யு.டி.பி.தென்னக்கோன் (செயலாளர்), திருமதி.ரி.பிரசாந் (பணிப்பாளர்) திரு. எம்.எல்.ஏ. சந்திரதாச (பணிப்பாளர்)

**இரண்டாம்நிரல்:** திருமதி. டி.பி.எல்.ஈ.என்.குணசேகர (உதவிப்பணிப்பாளர்), திரு. ப.ஆர்.என்.சுஜீவ (உதவிப்பணிப்பாளர்), திருமதி.ரி.அபேசேகர (உதவிப்பணிப்பாளர்), திருமதி. ஏ.டப்ல்யு.கே.எஸ். ரணசிங்க (உள்ளக கணக்காய்வாளா), திருமதி. டி.எஸ்.குணவர்த்தன (கணக்காளர்), திரு. ஜி.ரி.திஸர குசுன் புஸ்பசிறி (தகவல் தொழில் நுட்ப அதிகாரி), திருமதி. ஆர்.எம்.டி.நிமாலி ரத்நாயக்க (புள்ளிவிபர அதிகாரி)

# 1. இலங்கை பொருளாதாரம் தொடர்பான கண்ணோட்டம்

இலங்கையானது 2025இல் உயர் நடுத்தர வருமான மட்டத்தைக் கொண்ட பொருளாதார அந்தஸ்த்தை அடைந்து கொள்ளும் தூரநோக்கோடு முயற்சித்து வருகின்றது. இந்த வகையில், 2017ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4065 (சந்தை விலைகளிலான) தலைக்குரிய வருமானத்தை அடைந்துள்ளது.

2017ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நடைமுறை சந்தை விலைகளில் ரூபா. 13,289 பில்லியன்களாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் உண்மையான பொருளாதார வளர்ச்சியானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் (நிலையான விலைகளில்) 3.1 சதவீதமாகும்.குடிசன மதிப்பீட்டு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்ததின் தரவுகளின் படி இம்மந்தமான வளர்ச்சியானது பிரதானமாக 2016ஆம் ஆண்டில் இருந்து நாட்டில் காணப்பட்ட வரட்சியான காலநிலையின் காரணமாக விவசாயத்துறையின் உற்பத்தியில் காணப்பட்ட வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறையின் பங்களிப்பு 55.8 சதவீதமாகக் காணப்பட்டதோடு, விவசாயம் மற்றும் கைத்தொழில் துறையின் பங்களிப்பானது முறையே 7.7 சதவீதம் மற்றும் 27.2 சதவீதமாகக் காணப்பட்டது. நாட்டின் பிரதான அந்நியச் செலாவணி வருமானம் மூலமாக தொழிலாளர் மாற்றல்கள் மற்றும் ஏற்றுமதி வருமான மூலங்களான, பிரதானமாக புடவைகள் மற்றும் தைத்த ஆடைகள் , சுற்றுலா, போக்குவரத்து, தேயிலை, தொலை தொடர்பு, கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள், இறப்பர் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள், வாசனைத் திரவியங்கள், உணவும் குடிபானமும் மற்றும் புகையிலை என்பவற்றினால் பெறப்பட்டதாகும்.

இலங்கையானது மிகவும் சிறப்பாக மிலேனிய அபிவிருத்தி இலக்குகளை அடையப் பெற்றுள்ளதோடு நிலைபேறான அபிவருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலினையும் 2016ஆம் ஆண்டில் சேர்த்துக் கொண்டுள்ளது. நிதி ஆணைக்குழுவானது பதினேழு நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் 169 இலக்குகளையும் மாகாண சபைகளின் அபிவிருத்தி செய்முறையினூடாக அடைந்து கொள்வதற்காக பங்களிப்புச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது முக்கியமாக வறுமைத் தணிப்பு, ஜனநாயக ஆட்சி, சமாதானத்தை கட்டியெழுப்புதல், பருவநிலை மாற்றம், இடர் அபாயம், பொருளாதார சமமின்மை, புதுமை கண்டுபிடிப்பு நிலைபேறான நுகர்வு,சமாதானம் மற்றும் நீதி என்பன தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களினூடாக கவனம் செலுத்தியுள்ளது. இவ்வுலகலாவிய நிகழ்ச்சி நிரலினை உள்ளூர் மயமாக்கும் செயற்பாடுகளானது நாட்டின் அபிவிருத்தி கொள்கை சட்டம் மற்றும் உபாய அபிவிருத்தி முன்னுரிமைகளையும் கருத்திற் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. 2012/2013 ஆண்டில் காணப்பட்ட 6.7 சதவீத தலைக்குரிய வறுமைச் சுட்டியானது 2016ஆம் ஆண்டில் 4.1 சதவீதமாக வீழ்ச்சிகண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மனித அபிவிருத்தி குறிகாட்டியில் இலங்கையானது கடந்த காலங்களைப் போன்றே 2015ஆம் ஆண்டிலும் தெற்கு ஆசிய நாடுகளில் உயர் நிலையில் காணப்பட்டது. மனித அபிவிருத்தி குறிகாட்டியின்படி 2015இல் இலங்கையின் வாழ்க்கை எதிர்பார்க்கை 75 வருடங்களாகவும் தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் ஐ.அ.டொ 3746 மற்றும் சராசரி பாடசாலை செல்லும் காலம் 10.9 வருடங்களாகவும் காணப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் மிக அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள அதன் ‘‘உலகத்தின் உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு நிலைமை 2017’’ என்ற அறிக்கையில் இலங்கை சனத் தொகையில் 22.1 சதவீதமானோர் போசாக்கு குறைவானவர்களாக காணப்படுவதோடு இது தெற்காசிய நாடுகளுக்கிடையில் இலங்கையானது இரண்டாவது ஊட்டச்சத்து குறைபாடுடைய நாடாகக் காணப்படுகின்றது. ஆகவே நாட்டின் பொதுத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களானது நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு என்பவற்றில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும் என்பதை வழியுறுத்துகின்றது. ஏனெனில் பொருளாதாரத்தின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டுமாயின் ஒரு ஆரோக்கியமான வேலைப்படை இன்றியமையாததாகும்.

நாட்டின் வேலையற்றோர் வீதம் 4.2 சதவீதமாகும். அது பொதுவாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படுவதற்கு சமமானதாகும். எவ்வாறாயினும் இளைஞர்களிடத்தில் வேலையின்மையானது ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்படுவதோடு இது 2017 இல் 18.5 சதவீதத்தை பதிவு செய்துள்ளது.

நாட்டின் பொருளாதாரமானது இவ்வேலைப்படையை உள்வாங்கக் கூடிய வகையில் உபாயங்களை பிரயோகிப்பதன் தேவையை இது உணர்த்தி நிற்கின்றது. 2017இன் வேலைப்படையில் பெண்களின் பங்களிப்பானது 36.6 சத வீதமாகும். நாட்டின் அபிவிருத்தி செயன்முறையானது கட்டாயமாக வேலைப்படையில் பெண்ணின் பங்களிப்பினை உயர்த்துவதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

2017ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த செலவினம் மற்றும் தேசிய கடன்களானது ரூபா. 2,573.06 பில்லியன்களாகும். இவற்றில் 8 சதவீதமான தொகையானது மாகாண சபைகளின் மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளாக செலவு செய்யப்பட்டுள்ளது. பொதுச் செலவினமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19.4 சதவீதமாகும். இது கடந்த வருட 19.6 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் செலவினங்களை சீராக்கம் செய்வதில் அடையப் பெற்றுள்ள சாதகமான பெறுபேற்றின் விளைவாக குறைவடைந்துள்ளது. மீண்டெழும் செலவினமானது உண்மையான பெறுமதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5 சதவீதமாகும், இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பாக வட்டிக் கொடுப்பனவு மற்றும் அனர்த்த நிவாரணக் கொடுப்பனவு என்பவற்றின் காரணமாக அதிகரித்துள்ளது. இம் மீண்டெழும் செலவினங்களானது நாட்டின் சமூகநல செலவினங்களான குறிப்பாக இலவசக் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து மானியம் மற்றும் சமூகநல பாதுகாப்புத் திட்டங்கள் மீதான செலவினங்களையும் உள்ளடக்கியதாகும். மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன் கொடுப்பனவு என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9 சதவீதமாகும் இது 2016ஆம் ஆண்டில் 4.8 சதவீதமாக காணப்பட்டது. மொத்த பாதீட்டு பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.5% ஆகும். வருமான சேகரிப்பில் காணப்படும் பின்னடைவு மற்றும் அதிகரித்துச் மீண்டெழும் செலவு என்பன பிரதான காரணங்களாகும்.

**அட்டவணை 1 : தேசிய கணக்கு மற்றும் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் 2013 – 2017**

| குறிகாட்டி | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| **(1 சராசரிகள் நடைமுறை சந்தை விலையில் (ரூ.மில்)** | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 9,592,125 | 10,361,151 | 10,950,621 | 11,906,752 | 13,289,466 |
| மூன்று பிரதான பொருளாதார நடவடிக்கைகள் (பெறுமதி சேர்க்கப்பட்டது) | | | | | |
| விவசாயம் | 735,382 | 829,577 | 896,229 | 890,659 | 1,024,117 |
| கைத்தொழில் | 2,797,328 | 2,931,998 | 2,975,232 | 3,248,987 | 3,614,916 |
| சேவைகள் | 5,406,544 | 5,895,618 | 6,283,379 | 6,770,667 | 7,412,033 |
| **(2) சராசரி நிலையான விலைகளில் (2010 ரூ.மில்)** | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 7,846,202 | 8,235,429 | 8,647,833 | 9,034,290 | 9,315,488 |
| **மூன்று பிரதான பொருளாதார நடவடிக்கைகள் (பெறுமதி சேர்க்கப்பட்டது)** | | | | | |
| விவசாயம் | 611,676 | 639,696 | 669,725 | 890,602 | 639,273 |
| கைத்தொழில் | 2,119,080 | 2,218,711 | 2,267,725 | 2,399,285 | 2,492,286 |
| சேவைகள் | 4,405,644 | 4,618,501 | 4,894,717 | 5,124,016 | 5,289,227 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில** | | | | | |
| விவசாயம் | 7.8 | 7.8 | 7.7 | 7.1 | 6.9 |
| கைத்தொழில் | 27.0 | 26.9 | 26.2 | 26.6 | 26.8 |
| சேவைகள் | 56.2 | 56.1 | 56.6 | 56.7 | 56.8 |
| **(3) தலா வருமானம்** | | | | | |
| சந்தை விலையில் (ரூபா) | 465,976 | 498,828 | 522,304 | 561,560 | 619,729 |
| சந்தை விலையில் (ஐ.அ.டொ) | 3,609 | 3,821 | 3,842 | 3857 | 4,065 |
| நிலையான விலையில் (2010)(ரூபா) | 381,272 | 396,487 | 412,469 | 426,085 | 434,410 |
| **(4) பேரண்ட பொருளாதார குறிகாட்டிகள்** | | | | | |
| வேலையின்மை வீதம் | 4.4 | 4.3 | 4.7 | 4.4 | *4.2* |
| உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி | 3.4 | 5.0 | 5.0 | 4.5 | *3.1* |
| வருடாந்த சராசரி பணவீக்கம் | 6.9 | 3.3 | 2.2 | 4.0 | 6.6 |

*மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.*

2017ஆம் ஆண்டில் ஏற்றுமதிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானமானது ஐ.அ. டொ. 11.36 பில்லியன்களாகும். அதேவேளை இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொ. 21.0 பில்லியன்களாகும். நாட்டின் வர்த்தக பற்றாக்குறையானது அ.டொ. 9.62 பில்லியன்களாகும்.பெறுமதிஅடிப்படையில், 2017ஆம் ஆண்டில் இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளாவது ஆடைகள், தேயிலை, இறப்பர் உற்பத்திகள், பெற்றோலிய பொருட்கள், வாசனைத்திரவியங்கள், உணவு குடிபானங்கள், இயந்திரங்கள், இயந்திரவியல் தொகுதிகள், தெங்கு, மாணிக்கக் கற்கள், வைரம் மற்றும் ஆபரணங்கள் என்பனவாகக் காணப்பட்டதோடு பிரதான இறக்குமதி பொருட்களாக எரிபொருள், புடவைகள், இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள், கட்டிடப் பொருட்கள், இரசாயணப் பொருட்கள் மற்றும் வாகனங்கள் என்பனவாகும். நாட்டின் வர்த்தக மீதியானது வியாபாரப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு இடையிலான வித்தியாசத்தினை பிரதிபலிக்கின்றது. டொலரின் பெறுமதியடிப்படையில் கடந்த இருவருடங்களில் இது -8,873 மில்லியனிலிருந்து -9,619 அதிகரித்துள்ளது.

இலங்கையினை 2025இல் ஒரு உயர் வருமானத்தைக் கொண்ட இந்து சமுத்திரத்தின் பொருளாதார மையமாக நாட்டின் பொருளாதாரத்தை உருமாற்றம் செய்வதை தூர நோக்காகக் கொண்டு 2017இல் அறிவிக்கப்பட்டது. இத்தூர நோக்கினை அடைந்து கொள்வதற்கான பிரதான இலக்குகளை தலைக்குரிய வருமானத்தை ஐ.அ.டொ. 5000 ஆக அதிகரித்தல், ஒரு பில்லியன் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஐ.அ.டொ. 5 பில்லியன்களாக அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதி வருமானத்தை இரட்டிப்பாக்கி வருடாந்தம் ஐ.அ.டொ 20 பில்லியன் என்ற இலக்கை அடைவதாகும். இம்முயற்சியின் போது மாகாண சபைகளானது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் மனித வள மேம்பாடு எனபவற்றில் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. இதற்காக வேண்டி அரசாங்கமானது மாகாண சபைகளுக்கு போதுமான வளங்களைப் பெற்றுக் கொடுப்பது இன்றியமையாததாகும்.

எவ்வாறாயினும் நாடு தேசிய மட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சமூக பொருளாதார குறிகாட்டிகளில் குறிப்பாக தலைக்குரிய வருமானம், சுபீட்ச சுட்டி மற்றும் தலைக்குரிய வறுமைச் சுட்டி போன்றவற்றில் தேசிய மட்டத்தில் குறிப்பிடும் படியான முன்னேற்றத்தைக் காட்டினாலும் சமூகத்தில் ஏழை மற்றும் பணக்காரர்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு மற்றும் பிராந்திய அபிவிருத்தியில் வேறுபாடு என்பன எதிர்பார்ததளவில் குறைவடையவில்லை. கொள்கை வகுப்பாளர்கள் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும் இல்லையெனில் இது நாட்டின் நிலைபேறான நீண்ட கால அபிவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

**அட்டவணை 2: சில முக்கிய சமூக பொருளாதார குறிகாட்டிகள்**

| இல | குறிகாட்டி | அலகு | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| 1 | தலைக்குரிய வருமானம் | ஐ.அ.டொ | 3842 | 3857 | 4065 |
| 2 | வளர்ச்சி வீதம் | % | 5.0 | 4.5 | 3.1 |
| 3 | சுபீட்ச சுட்டி | % | 0.685 | 0.746 | - |
| 4 | வேலையற்றோர் வீதம் | % | 4.7 | 4.4 | 4.2 |
| 5 | பண வீக்க வீதம் | % | 2.2 | 4.0 | 6.6 |
| 6 | சேமிப்பு விகிதாசாரம் | மொ.உ.உ % | 28.8 | 32.8 | 33.9 |
| 7 | முதலீட்டு விகிதாசாரம் | மொ.உ.உ % | 31.2 | 35.0 | 36.5 |
| 8 | பாதீட்டு பற்றாக்குறை | மொ.உ.உ % | -7.6 | -5.4 | -5.5 |
| 9 | கணனி அறிவு வீதம் | % | 27.1 | 27.5 | 28.3* |
| 10 | சிசு மரண வீதம் *** | 1000 உயிர் பிறப்பிற்கு | 9.16 | 8.20 | 9.00 |
| 11 | தாய் இறப்பு வீதம்*** | 100,000 உயிர் பிறப்பிற்கு | 33.7 | 33.8 | - |
| 12 | தலைக்குரிய வறுமைச் சுட்டி | % | 6.7** | 4.1 | - |

*மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.,குடும்பச் சுகாதாரப் பனிமணை மற்றும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு*

*குறிப்பு: *2017 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கும்,***2012/13 ஆண்டுகளுக்கு*

# 2. மாகாணங்களில் சமூக பொருளாதார காரணிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள்

அரசாங்கமானது சமூக நல நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பொதுச்சேவை வளங்களை தொடர்ந்தும் பெற்றுக் கொடுப்பதற்காக அவசியமான நிதியினை வருடாந்த வரவு செலவுத்தட்டத்தின் மீண்டெழும் செலவுகளாக ஒதுக்கீடு செய்வதோடு நாட்டின் அபிவிருத்தியில் நேரடியாக தொடர்பு பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்படுத்தலுக்கு அவசியமான நிதியினை மூலதன செலவு ஒதுக்கங்களாக மேற்கொள்கின்றது. எவ்வாறாயினும் மீண்டெழும் செலவினம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கிடையில் நேரடி தொடர்பு காணப்படாவிட்டாலும் வளர்ச்சியுடன் தொடர்புபட்ட அபிவிருத்தி செயன்முறை மற்றும் சமூக சமத்துவத்திற்கு இது முக்கியமானதாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் பிரதான பிரச்சினை யாதெனில் மொத்த வரவு செலவு திட்டத்தில் 80 சத வீதம் மீண்டெழும் செலவாகும். இதனால் தனியாள் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்ப வசதிகளை மேம்படுத்தவதற்கு அவசியமான மூலதன செலவுகளை உள்வாங்குவதற்கு குறைந்த இடைவெளியே காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்கமானது பொருத்தமானவர்களுக்கு மாத்திரம் சமூக நலன்புரி கொடைகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற வெளிப்படையான செலவு முகாமைத்துவ முறைகளினூடாக செலவுக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதற்கு முனைய வேணடும்.அதே வேளை பிராந்திய ரீதியாக சமூக பொருளாதார அபிவிருத்தியில் சமமின்மை தொடர்ந்தும் காணப்படுகின்றது. அரசாங்கமானது வரவு செலவுத்திட்டத்தில் வளங்களை ஒதுக்கீடு செய்யும்போது இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

இவ் அத்தியாயமானது 2016 ஆம் ஆண்டின் அபிவிருத்தி குறிகாட்டித் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மாகாண அடிப்படையில் காணப்படுகின்ற பிராந்திய அபிவிருத்தியின் தற்போதைய நிலையினை மீளாய்வு செய்கின்றது.

**அட்டவணை 3 : மாகாண அடிப்படையில் சனத்தொகை,நிலம்,மொ.உ.உ,மற்றும்மொ.உ..தலா வருமானம்- 2016**

| மாகாண சபைகள் | நடு ஆண்டு சனத்தொகை ('000) | நிலப்பரப்பு (ச.கிமீ) | மொ.உ.உ (ரூ.மில்) | மொ.உ.உ பங்கு (%) | மொ.உ.உ தலா வருமானம்( ரூ.மில்) | மேல் மாகாணதலா வருமானத்தில் இருந்தான வித்தியாசம் (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாண சபை | 6,028 | 3593 | 4,723,810 | 39.7 | 783,645 | 0 |
| மத்திய மாகாண சபை | 2,690 | 5575 | 1,254,934 | 10.5 | 466,518 | 317,126 |
| தெற்கு | 2,584 | 5383 | 1,196,923 | 10.1 | 463,205 | 320,439 |
| வடக்கு | 1,107 | 8290 | 497,950 | 4.2 | 449,819 | 333,825 |
| கிழக்கு | 1,645 | 9361 | 684,465 | 5.8 | 416,088 | 367,557 |
| வடமேல் | 2,477 | 7506 | 1,269,511 | 10.7 | 512,520 | 271,125 |
| வடமத்தி | 1,330 | 9741 | 690,728 | 5.8 | 519,344 | 264,300 |
| ஊவா | 1,333 | 8335 | 691,011 | 5.8 | 518,388 | 265,257 |
| சப்ரகமுவ | 2,009 | 4921 | 897,417 | 7.5 | 446,698 | 336,946 |
| **இலங்கை** | **21,203** | **62,705** | **11,906,752** | **100** | **561,560** | |

*மூலம்: இலங்கை பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரம்-இலங்கை மத்திய வங்கி*

2016 ஆண்டின் மத்திய காலப் பகுதியில் நாட்டின் சனத்தொகையானது 21.2 மில்லியன்களாக் காணப்பட்டது. இதில் 28 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தில் வாழும் அதே வேளை வட

மாகாணத்தில் மிகவும் குறைவான தொகையினரே வாழ்ந்து வருகின்றனர். இதற்கு மேலதிகமாக மேல் மாகாணமானது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் தலா வருமானம் ஆகிய இரண்டிலும் உயர் பங்கு வகிப்பதுடன் மற்றைய மாகாணங்களை விடவும் குறைந்த நிலப் பரப்பினையே கொண்டுள்ளது. இதற்கு அடுத்த படியாக மத்திய, தென், வடமேல் மாகாணங்கள் கூடுதலான மொத்த தேசிய உற்பத்தி மற்றும் உயர் தலா வருமானத்தைக் கொண்டுள்ளது. வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் குறைந்த மட்டத்திலான மொத்த தேசிய உற்பத்தியில் பங்களிப்பைச் செய்தாலும் அவைகள் உயர் அளவிலான தலா வருமானத்தைக் காண்பிக்கின்றன. ஏனைய மாகாணங்கள் அடையப் பெற்றுள்ள பொருளாதார வளர்ச்சியின் காரணமாக மேல் மாகாணத்தின் மொத்த தேசிய உற்பத்தி மீதான பங்களிப்பானது குறைவடைந்துள்ளது. அதே போல் உயர் தலாவருமானம் (மேல் மாகாணம்) மற்றும் ஏனைய ஒவ்வொரு மாகாணங்களின் வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடானது குறிப்பிடத்தக்களவில் உயர்வானதாகும். கிழக்கு மாகாணமானது உயர் வேறுபாட்டைக் காட்டுகின்ற அதே வேளை வடமத்திய மாகாணமானது மிகக் குறைவான வேறுபாட்டைக் காட்டுகின்றது.

**அட்டவணை 4 : மாகாண அடிப்படையில் மொ.உ.உ இல் துறை ரீதியான பங்களிப்பு 2015 - 2016**

| மாகாணம் | விவசாயம் | | கைத்தொழில் | | சேவைத் துறை | |
|---|---|---|---|---|---|---|
| | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** |
| மேல்மாகாண சபை | 2.1 | 2.0 | 34.4 | 33.5 | 56.1 | 56.1 |
| மத்தி மாகாண சபை | 10.8 | 10.4 | 21.2 | 21.1 | 60.7 | 60.0 |
| தெற்கு மாகாண சபை | 14.6 | 13.4 | 16.8 | 17.3 | 61.4 | 60.8 |
| வடக்கு மாகாண சபை | 12.3 | 12.5 | 22.8 | 24.8 | 57.7 | 54.3 |
| கிழக்கு மாகாண சபை | 13.2 | 12.1 | 24.5 | 25.1 | 55.0 | 54.4 |
| வடமேல் மாகாண சபை | 11.6 | 10.0 | 26.6 | 26.7 | 54.6 | 54.9 |
| வடமத்திய மாகாண சபை | 12.8 | 10.7 | 18.9 | 19.4 | 61.1 | 61.4 |
| ஊவா மாகாண சபை | 14.8 | 13.0 | 25.2 | 27.6 | 52.7 | 51.0 |
| சப்ரகமுவ மாகாண சபை | 8.7 | 7.6 | 24.1 | 26.0 | 60.0 | 58.0 |
| **இலங்கை** | **8.2** | **7.5** | **27.2** | **27.3** | **57.4** | **56.9** |

*மூலம்:: இலங்கை மத்திய வங்கி.*

மாகாண சபைகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பானது 2015 ஆம் ஆண்டில் 2.1 சதவீதம் தொடக்கம் 14.8 சதவீதம் வரையில் வேறுபட்டுக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் வட மாகாண சபையின் பங்களிப்பானது அதிகரித்த அதே வேளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏனைய மாகாணங்களின் பங்களிப்பானது வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

மொத்த தேசிய உற்பத்தியில் மேல் மற்றும் மத்திய மாகாணங்களின் கைத்தொழில் பங்களிப்பானது விகிதாசார அடிப்படையில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ள அதே வேளை ஏனைய அனைத்து மாகாணங்களும் வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது. 2016 ஆம் ஆண்டில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மேல் மாகாணமானது பெருமளவில் பங்களிப்புச் செய்துள்ளதோடு தென் மாகாணமானது குறைந்த பங்களிப்பைப் பதிவு செய்துள்ளது.

சேவைத் துறையானது அனைத்து மாகாணங்களினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பிரதான பங்களிப்பைச் செய்துள்ளதோடு 2015 ஆம் ஆண்டில் அது 52.7 சதவீதம் மற்றும் 61.4 சதவீதத்துக்கும் இடைப்பட்ட பங்களிப்பினையும் மற்றும் 51.0சதவீதம் மற்றும் 61.4 சதவீதத்தினை 2016 ஆண்டிலும் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு செய்துள்ளது. எவ்வாறாயினும் சேவைத் துறையின் பங்களிப்பானது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 இல் மத்திய மாகாணம், தென் மாகாணம், வட மாகாணம், கிழக்கு மாகாணம், ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் வீழ்ச்சியைக் காட்டியுள்ளது.

### வரைபு 1 : மாகாண அடிப்படையில் சராசரி மாதாந்த குடும்ப வருமானம் - 2012/13 - 2016




*மூலம்:புள்ளிவிபரவியல் திணைக்களம்*

வரைபு 1 ஆனது மாகாண அடிப்படையில் சராசரி மாதாந்த குடும்ப வருமானத்தைக் காட்டுகின்றது. 2012/13 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 இல் சராசரி மாதாந்த குடும்ப வருமானமானது அனைத்து மாகாணங்களிலும் உயர்வானதாகக் காணப்படுகின்றது. மேல், தென் மற்றும் வட மேல் மாகாணங்களில் உயர் வருமானம் காணப்பட்ட அதே வேளை கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வருமானமானது ரூபா பத்தாயிரத்தை தாண்டியுள்ளது. மேல் மற்றும் தெற்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் குடும்ப வருமானமானது தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும்.

### வரைபு 2 : மாகாண அடிப்படையில் வேலையற்றோர் வீதம் 2016 – 2017




| | மேல் | மத்திய | தெற்கு | வடக்கு | கிழக்கு | வட மேற்கு | வட மத்திய | ஊவா | சப்ரகமுவ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2016 | 3.2 | 5.1 | 5.6 | 6.3 | 5.5 | 3.2 | 3.4 | 4.6 | 5.5 |
| 2017 | 3.2 | 4.5 | 5.0 | 7.7 | 6.0 | 3.7 | 4.3 | 3.5 | 3.7 |

*மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம்*

வரைபு 2 ஆனது 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் மாகாண அடிப்படையில் வேலையற்றோர் விகிதத்தினை காட்டுகின்றது. 2017 ஆம் ஆண்டில் உயர்ந்த பட்ச வேலையின்மையானது முறையே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பதிவாகியுள்ளதுடன் குறைந்த பட்ச வேலையின்மையானது மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வேலையற்றோர் வீதமானது 2017 ஆம் ஆண்டில் ஊவா, சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் வீழ்ச்சி கண்டுள்ளது. இக்காலப் பகுதியில் வடக்கு, வட மேல், வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் வேலையற்றோர் வீதமானது அதிகரித்துள்ளது.

**அட்டவணை 5 : மாகாண அடிப்படையில் தலைக்குரிய வறுமைச் சுட்டி மற்றும் வறிய குடியிருப்புக்களின் வீதம் 2012/2013 மற்றும் 2016**

| மாகாணம் | தலைக்குரிய வறுமைச் சுட்டி(%) | | முன்னைய வருடங்களுக்கான வரிசைப்படுதல் அடைப்புக்குறியினுள் காட்டப்பட்டள்ளது |
|---|---|---|---|
| | 2012/13 | 2016 | |
| மேல் | 2.0 | 1.7 | 1 (1) |
| மத்திய | 6.6 | 5.4 | 5 (3) |
| தெற்கு | 7.7 | 3.0 | 3 (5) |
| வடக்கு | 10.9 | 7.7 | 9 (7) |
| கிழக்கு | 11.0 | 7.3 | 8 (8) |
| வடமேல் | 6.0 | 2.7 | 2 (2) |
| வடமத்திய | 7.3 | 3.3 | 4 (4) |
| ஊவா | 15.4 | 6.5 | 6 (9) |
| சப்ரகமுவ | 8.8 | 6.7 | 7 (6) |
| **இலங்கை** | **6.7** | **4.1** | |

*மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம்*

அட்டவணை 05 ஆனது 2013 மற்றும் 2016 ஆண்டுகளில் தலைக்குரிய வறுமைச் சுட்டியை (வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் சனத்தொகையின் வீதம்) காட்டுகின்றது. மாகாணங்களுக்கிடையில் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தலைக்குரிய வறுமை வீதத்தில் குறிப்பிடும் படியான வீழ்ச்சியைக் காணக் கூடியதாகவுள்ளது. முக்கியமாக ஊவா, தென் மற்றும் வட மாகாணங்களின் தலைக்குரிய வறுமைச் சுட்டியானது குறிப்பிடத்தக்க மட்டத்தில் குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**வரைபு 3 : மாகாண அடிப்படையில் வறுமையான குடும்பங்களின் வீதம் 2012/2013 மற்றும் 2016**



வரைபு 3 ஆனது 2012/2013 மற்றும் 2016 மாகாண அடிப்படையில் வறுமையான குடும்பங்கள் மற்றும் வீதாசாரத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் காட்டுகின்றது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் வறிய குடும்பங்களின் எண்ணிக்கையானது குறைவாகும். 2012/2013 இல் 7.7%தென் மாகாணத்தின் தலைக்குரிய வறுமை சுட்டியானது 2016 இல் 3% குறிப்பிடும் படியான வீழ்ச்சியைக் காணக் கூடியதாகவுள்ளது. அதே போல் வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் தமது வறுமை மட்டத்தை அரைவாசியாகக் குறைத்து சிறப்பான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

**வரைபு 4: பாதுகாப்பான குடி நிர் கிடைக்கப்பெறும் குடித் தொகுதிகளின் வீதம் - 2012/13 மற்றும் 2016**




**மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம்**

வரைபு 4 ஆனது மாகாண அடிப்படையில் 2012/2013 மற்றும் 2016 ஆண்டு காலப்பகுதியில் பாதுகாப்பான குடிநீா் வசதியினைப் பெற்றுள்ள வீட்டுத்தொகுதியின் வீதாசாரத்தினை விபரிக்கின்றது. மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 20% - 25% குடித்தொகுதிகளுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக் கொள்வது பிரச்சினையாகவே உள்ளது. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், பெருமளவில் குழாய் நீர் விநியோக வசதிகளுடன் கூடிய மேல் மாகாணமானது பாதுகாப்பான குடிநீா் வசதியின் அடிப்படையில் மிக உயர் நிலையில் காணப்படுகின்றது.

### அட்டவணை 6 : மலசலகூட வசதிகளுடன் கூடிய வீட்டுத்தொகுதிகளின் பங்கீட்டு விதம் -2012/13 மற்றும் 2016

| மாகாணம் | பிரத்தியேகமான வசதிகளைக் கொண்ட வீடுகள் % | | ஏனையவை | மலசலகூட வசதிகளற்ற வீடுகளின் % |
|---|---|---|---|---|
| | 2012/13 | 2016 | 2016 | 2016 |
| மேல் மாகாண சபை | 91.0 | 93.0 | 6.9 | 0.1 |
| மத்தி மாகாண சபை | 89.3 | 91.5 | 8.3 | 0.1 |
| தெற்கு மாகாண சபை | 93.1 | 92.8 | 7.0 | 0.1 |
| வடக்கு மாகாண சபை | 83.9 | 89.1 | 9.9 | 1.0 |
| கிழக்கு மாகாண சபை | 82.5 | 90.6 | 7.4 | 1.9 |
| வடமேல் மாகாண சபை | 91.4 | 90.3 | 8.8 | 0.8 |
| வடமத்திய மாகாண சபை | 90.4 | 88.7 | 10.6 | 0.7 |
| ஊவா மாகாண சபை | 89.3 | 92.4 | 7.5 | 0.1 |
| சப்ரகமுவ மாகாண சபை | 91.2 | 91.8 | 8.1 | 0.1 |
| **இலங்கை** | **89.9** | **91.7** | **7.9** | **0.4** |

*மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம்*

நாட்டில் 91.7 சதவீதமான குடிகள் தனக்கென புறம்பான நிலையான மலசல கூட வசதிகளைக் கொண்டுள்ளதுடன் இது 2012/2013 ஆம் ஆண்டில் 89.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஒரு முன்னேற்றகரமான நிலையாகும். எவ்வாறாயினும் 2016 ஆண்டின் சராசரியுடன் ஒப்பிடுகையில் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களானது பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் காணப்படும் வீட்டுத் தொகுதிகளே மலசல கூட வசதியற்ற வீட்டுத் தொகுதிகளில் உயர் சதவீத்தைக் கொண்டுள்ளதை ஆட்டவணை 6 விபரிக்கின்றது

### அட்டவணை 7: அரச பாடசாலைகள்,ஆசிரியர்கள், மாணவர்கள்,உயர்தர பரீட்சையில் தேறிய மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதிபெற்ற மாணவர்கள்- 2016

| மாகாணம் | அரச பாடசாலைகள் | அரச பாடசாலைகளில் காணப்படும் மாணவர்களின் எண்ணிக்கை | அரச பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை - | ஆசிரியர் மாணவர் விகிதம் | உயர்தர பரீட்சையிற்கு தோற்றிய மாணவர்கள் | பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதிபெற்ற மாணவர்களின் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 1,360 | 968,832 | 44,361 | 22 | 57,254 | 64.38 |
| மத்திய | 1,521 | 544,208 | 33,469 | 16 | 26,654 | 61.99 |
| தெற்கு | 1,114 | 526,270 | 29,027 | 18 | 29,620 | 63.79 |
| வடக்கு | 971 | 243,314 | 16,559 | 15 | 12,327 | 64.53 |
| கிழக்கு | 1,106 | 394,080 | 20,854 | 19 | 14,979 | 62.03 |
| வடமேல் | 1,259 | 504,620 | 27,805 | 18 | 23,833 | 61.52 |
| வடமத்திய | 805 | 286,924 | 16,699 | 17 | 12,307 | 59.27 |
| ஊவா | 895 | 288,423 | 19,801 | 15 | 14,393 | 63.29 |
| சப்ரகமுவ | 1,131 | 386,659 | 24,180 | 16 | 20,498 | 66.58 |
| **இலங்கை** | **10,162** | **4,143,330** | **232,555** | **18** | **211,865** | **63.36** |

*கல்வி அமைச்சு இலங்கை பரீட்சைத் திணைக்களம்*

அட்டவணை 7 ஆனது மாகாணங்களின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர்கள், மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவர்களுக்கான ஆசிரியர்களின் விகிதாசாரம், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பல்கலைக்கழகத்துக்கு நுழைவதற்கு தகுதியான மாணவர்களின் வீதாசாரம்

என்பவற்றை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. மேல் உள்ள அட்டவணையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் நாடு பூராகவும் 10,162 அரச பாடசாலைகளில் 4,143,330 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர். இதில் மேல் மாகாணத்திலேயே அதி கூடிய மாணவர்களும் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர் வடமத்திய மாகாணத்திலேயே குறைந்தளவான மாணவர்களும் பாடசாலைகளும் காணப்படுவதுடன் மிகவும் குறைந்தளவான மாணவர்களே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். வட மாகாணத்திலேயும் குறைந்த அளவிலான மாணவர்களும் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். அனைத்து மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் பல்கலைக்கழக அனுமதியின் அடிப்படையில் சப்ரகமுவ மாகாணத்தின் கல்விப் பெறுபேறுகளானது மிகவும் உயர்வாகக் காணப்படுகின்றது.

கல்வித்தரத்தினை அளவீடு செய்வதற்கு மாணவர் ஆசிரியர் விகிதம் ஓர் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிகாட்டியாகும். மாகாணங்களுக்கிடையே இக்குறிகாட்டியின் அடிப்படையிலும் வேறுபாடுகளை அவதானிக்க முடியுமாயுள்ளது.

**அட்டவணை 8: காணப்படும் மருத்துவ அதிகாரிகள் - 2015**

| மாகாணம் | லவத்தியர்களின் எண்ணிக்கை | தாதிகளின் எண்ணிக்கை | 100,000 பேருக்கான அதிகாரிகள் | |
|---|---|---|---|---|
| | | | வைத்தியர்கள் | தாதிகள் |
| மேல் | 7,324 | 11,570 | 122 | 194 |
| மத்திய | 1,825 | 4,166 | 69 | 157 |
| தெற்கு | 1,564 | 4,051 | 61 | 158 |
| கிழக்கு | 673 | 1,078 | 62 | 98 |
| வடக்கு | 1,236 | 2,198 | 77 | 136 |
| வடமேல் | 1,238 | 2,873 | 51 | 117 |
| வடமத்திய | 873 | 1,969 | 67 | 150 |
| ஊவா | 674 | 1,772 | 51 | 135 |
| சப்ரகமுவ | 893 | 2,303 | 45 | 116 |
| **இலங்கை** | **16,300** | **31,980** | **78** | **153** |

*மூலம்: சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்தறை அமைச்சு*

அட்டவணை 8 ஆனது மாகாண அடிப்படையில் 100,000 பேருக்கு காணப்பட்ட வைத்தியர்களினதும் தாதிகளினதும் எண்ணிக்கையையும் காட்டுகின்றது. மேல் மாகாணமானது 100,000 பேருக்கான அதிகூடிய வைத்தியர்களையும் 100,000 பேருக்கான அதிகூடிய தாதிகளையும் கொண்டுள்ளது. இரண்டாவதாக 100,000 பேருக்கான அதிகூடிய தாதிகளை தென் மாகாணம் கொண்டுள்ளது. வட மாகாணம்இரண்டாவதாக 100,000 கூடிய வைத்தியர்களையும் கொண்டுள்ளதோடு எவ்வாறாயினும் கிழக்கு மாகாணமானது மேற்கூறப்பட்டுள்ள இரண்டு குறியீடுகளிலும் மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றது. அதே வேலை சப்ரகமுவ மாகாணமானது 100,000பேருக்கு குறைந்தளவான வைத்தியர்களைக் கொண்டள்ளது.

# 3. ஆட்சி மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குதல்

நல்லாட்சியானது நிதி ஆணைக்குழுவின் முழுமையான பொறுப்புக் கூறல் சட்டகத்தை கொண்டுள்ளது. இது செயற்பாட்டு முகாமையானது இலக்குகளை வினைத்திறன், மற்றும் செயற்திறனாக மற்றும் பொறுப்புடன் அடைந்துகொள்வதற்காக நிதி ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைகளுமாகும்.

## 3.1. சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குதல்

நிதி ஆணைக்குழுவின் நல்லாட்சி முறைமை மற்றும் நடைமுறைகளின் முக்கிய கோட்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 9: சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குதல் (நல்லாட்சிக் கோட்பாடுகள்)**

| முக்கிய கோட்பாடுகள் | தேவைப்பாடுகள் | நிலைமை | இணக்கம் |
|---|---|---|---|
| அ. நேர்மை, நெறிமுறை, பெறுமானங்கள் மற்றும் சட்டதிட்டங்கள் என்பவற்றின் மீதான உறுதியான அர்ப்பணிப்பு | நிதி ஆணைக்குழுவானது நல்லாட்சிக் கோட்பாடுகளை பின்பற்றி நிதி ஒழுங்குவிதிகள், தாபன கோவை அரச சுற்று நிருபங்கள் மற்றும் ஏனைய வழிகாட்டல்கள் மீது உரிய கவனம் செலுத்த வேண்டும் | நிதி ஆணைக்குழுவானது அரச ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களை பின்பற்றியள்ளது. | ✓ |
| | நிதி ஆணைக்குழுவின் நிர்வாகக் கூட்டங்கள் வழக்கமான முறையில் இடம்பெறல் வேண்டும் | ஆணைக்குழுவின் செயற்பாடானது சிறப்பான முறையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் நாளாந்த நடவடிக்கை மற்றும் விசேட அம்சங்களை கலந்துரையாடுவதற்கு வழக்கமான முறையில் நிர்வாகக் கூட்டங்கள மற்றும் உப கூட்டங்கள் மாதாந்தம் இடம்பெற்றன. | ✓ |
| ஆ. வெளிப்படைத் தன்மை மற்றும் உரிய பங்குதாரர்கள் தொடர்ச்சியாக கலந்துரையாடல் | தீர்மானம் மேற்கொள்ளும் போது அனைத்து தரப்புக்களையும் கருத்திற்கொள்ளுதல் | நிதி ஆணைக்குழுவானது பிரதானமாக ஜனாதிபதி செயலகம், அரசியலமைப்பு பேரவை, மத்திய வங்கி, பொதுத் திறைசேரி, அமைச்சுக்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற உரிய நிறுவனங்களுடன் நெருக்கமாக செயலாற்றுகின்றது. | ✓ |
| | மாகாண சபைகளின் திட்டமிடல் மதிப்பீடு, மற்றும் கண்காணிப்பு என்பவற்றிற்கு சரியான வழிகாட்டல்களை வழங்குதல் | நிதி ஆணைக்குழுவானது தொழிற்பாடுகளை சிறப்பான முறையில் அமுல்படுத்தும் வகையில் ஒரு ஒத்திசைவான தொடர்பாடல் முறைமையைப் பேணுகின்றது. | ✓ |
| நிலைபேறான பொருளாதார, சமூக மற்றும் சூழல் நலன்களை அடையப்பெறும்வகையில் வெளியீடுகளை வரையறை செய்தல் மற்றும் எதிர்பார்க்கப்படும் வெளியீ:டுகளை உயர்ந்தபட்சமாக அடைந்து கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் தீர்மானித்தல் | | நிதி ஆணைக்குழுவானது நிலைபேறான வெளியீடுகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் உபாயத் திட்டத்தை ஏற்கனவே தாயாரித்துள்ளது.<br><br>நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் வகையில் நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆபத்து மதிப்பீட்டினை மேற்கொண்ட செயற்பாடுகளானது தொடர்ச்சியான கண்காணிப்பினூடாக முகாமை செய்யப்பட்டது.<br><br>2017 ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான தொடர் நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தப்பட்டன. | ✓<br><br>✓<br><br>✓ |

| | | | |
|---|---|---|---|
| நிறுவனத்தின் இயளலவை கட்டியெழுப்புதல் தலைமைத்துவ ஆளுமை, மற்றும் தனிப்பட்டவர்களின் ஆற்றல் என்பன உள்ளடங்கலாக | அனைத்து ஆளணி உறுப்பினர்களுக்கும் பொருத்தமான பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவற்றை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் பயிற்சி அபிவிருத்தித்தேவையை அடையாளம் காணல் | நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது பங்கினை சிறப்பாக ஆற்றுவதற்கு ஏற்றவகையில் அறிவு, திறன், மற்றும் மனோபாவத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர் | ✓ |
| | | பயிற்சித் தேவைகளுக்கான நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டது. | ✓ |
| | | அறிவினை அதிகரிக்கும் வகையில் சிறப்பு விரிவுரைகள் மாதாந்தம் ஒழுங்கு செய்யப்பட்டன | ✓ |
| | | அதிகாரிகளின் விடயப்பரப்புக்கள் தொடர்பாக அறிவு மற்றும் திறன்களை வளர்க்கும் வகையில் வாராந்தம் முன்வைப்புக்களை சமர்ப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டனர் | ✓ |
| | நிதி ஆணைக்குழுவின் உற்பத்தித்திறன் மற்றும் ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்குடன் அதன் ஊழியர்களை அணியாக செயற்படும் அணுகுமுறைமையை ஊக்குவிக்கின்றது. | ஆணைக்குழுவின் செயற்பாடானது சிறப்பான முறையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் நாளாந்த நடவடிக்கை மற்றும் விசேட அம்சங்களை கலந்துரையாடுவதற்கு வழக்கமான முறையில் நிர்வாகக் கூட்டங்கள் இடம்பெற்றன | ✓ |
| | | ஆளனியின் செயற்பாடுகளானது தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்பட்டன | ✓ |
| ஊ. சிறப்பான உள்ளக கட்டுப்பாடு மற்றும் உறுதியான பொது நிதி முகாமைத்துவத்தின் மூலம் ஆபத்துக்கள் மற்றும் செயலாற்றுகையான து முகாமை செய்யப்படல் மற்றும் வெளிப்படைத் தன்மை மற்றும் அறிக்கையிடல் சிறப்பான வகை கூறும் தன்மை என்பவற்றுடன் கூடிய சிறந்த நடைமுறைகளை அமுல்படுத்தல் | நிதி ஆணைக்குழுவானது பாதீடு, திட்டம் மற்றும் இடர்களை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்வதற்காக ஒரு செயன் முறைமையை உருவாக்குதல் வேண்டும் | ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தினால் மீளாய்வு செய்யப்பட்டது | ✓ |
| | | 2017ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை ஏற்கனவே தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | ✓ |
| | | நிதி ஒழுங்குவிதிகளின் படி அதிகார எல்லை மற்றும் நிதி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டன | ✓ |
| | | நிதி ஆணைக்குழுவின் மாதாந்த கூட்டத்தில் இணைக்கப்பாட்டு அறிக்கை மற்றும் நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன. | ✓ |
| | | நிதி ஆணைக்குழு மற்றும் மாகாண சபைகள் தொடர்பில் இலத்திரனியல் நிதி விரிவாக்கல் கொள்கையின் அடிப்படையில் திட்டமிடல், பாதீடு, கண்காணிப்பு என்பனவற்றை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு ஒழுங்கினை முகாமைத்துவ தகவல் முறைமை தரவுத் தளத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன | ✓ |
| | நிதி ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயற்பாடானது கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்படல் வேண்டும் | நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது மீளாய்வு செய்யப்பட்டு அது காலாண்டுகளில் கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்பு உள்ளகக் கணக்காய்வு அறிக்கையானது தகவலுக்காக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | ✓ |

### 3.2. நிதி ஆணைக்குழுவின் ஆட்சி முறைக்கான வழிகாட்டல்

நிதி ஆணைக்குழுவிற்கான ஆட்சி முறைக் கூற்றானது 2017 ஆம் ஆண்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். ஆட்சிமுறை நெறிப்படுத்தலானது பிரதானமாக ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர், மற்றும் சிரேஸ்ட அதிகாரிகளின் பாங்கு மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கியதாகும்.

நிதி ஆணைக்குழுவானது தனது ஆட்சிமுறை கட்டமைப்பை சர்வதேச தரத்திலான சிறப்பான நடைமுறைகளைப் பின்பற்றி மேம்படுத்துவதற்கு ஒரு அடிப்படையை வழங்குவதோடு அது ஆணைக்குழுவின் தோற்றம் மற்றும் செயலாற்றுகையில் அடிப்படை மாற்றத்தை உருவாக்கும். ஒரு நிறுவனத்தின் அனுமானமானது அது சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு விரிந்த சமூகத்திற்கு குறிப்பாக அதன் பங்குதாரர்களுக்கு வெளிப்படையாகவும் மற்றும் வகை கூறுவதாகவும் காணப்படும். இது சமூக விழுமியங்கள் மற்றும் அரசாங்கத்தின் தூர நோக்கோடு ஆணைக்குழுவின் ஆணையினை இணையச் செய்வதற்கு ஒரு தொகுதி கொள்கைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

அதே போல் நிதி ஆணைக்குழுவானது நல்லாட்சி செயற்பாட்டின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு சிறப்பாக உருவாக்கப்பட்ட பல மேற்பார்வை பொறிமுறைகளைக் கொண்டுள்ளது. செயற்பாட்டு நடைமுறைகளை தனது ஒரு விதிகளின் தொகுப்பினை விடவும் உயர்வினைத் தரும். அதன் மூலம் பங்குதார்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் மீது சிறப்பான கண்காணிப்பினை மேற்கொள்வதற்கு இது அவசியமான கூறுகளாகும்.

உறுதிப்படுத்தல் பரிமாணமானது நல்லாட்சி, ஏனைய விடயங்களை தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் பாங்கு, ஆணைக்குழு மற்றும் அதன் குழுக்கள் என்பவற்றின் கலவை மற்றும் பங்கு, கட்டுப்பாடுகள் மற்றும் சட்டம் ஒழுங்கு விதிகளுடன் இணங்குதல் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

### 3.3. மாகாண சபைகள் முறைமையில் நல்லாட்சி

தமது நடவடிக்கைகள் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவான முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவது மற்றுமல்லாமல் பொது நிதியானது பாதுகாக்கப்படல் மற்றும் உரிய முறையில் கணக்கீடு செய்தல் மற்றும் பொருளாதார ரீதியாக நன்மை பயக்கும் வகையில் வினைத்திறனாக மற்றும் செயற்திறனாக பயன் படுத்துவதும் மாகாண சபைகளின் பொறுப்பாகும். இது தொடர்பில் நிதி ஆணைக்குழுவானது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேவையான உதவிகளை வழங்குகின்றது.

### 3.4. மனித வள முகாமைத்துவம்

#### 3.4.1. நிறுவகக் கட்டமைப்பு

நிதி ஆணைக்குழுவின் உரிய நோக்கங்களை சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கு மனித வளத்தினை மேம்படுத்துவதன் அவசியத்தினை ஆணைக்குழுவானது நன்கு உணர்ந்துள்ளது. இதன் பொருட்டு தந்திரோபய திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் சிறப்பான நிறுவனக் கட்டமைப்பின் அவசியம் அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிர்வாகக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது:-

## வரைபு 5: நிறுவக கட்டமைப்பு




உ/ப உதவிப் பணிப்பாளர்

### 3.4.2. நிதி ஆணைக்குழுவின் ஆளணி

ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட மொத்த ஆளணியானது 77 ஆக காணப்பட்டாலும் 2017 ஆம் அண்டில் ஆணைக்குழுவில் காணப்பட்ட ஆளணி 49 ஆகும். ஆணைக்குழுவானது உயர்மட்ட ஆளணிப்பற்றாக்குறைக்கு முகம் கொடுத்தள்ள அதே வேளை மூன்றாம் நிலை ஆளணியான உதவி ஆராய்ச்சி அதிகாரிகள், அபிவிருத்தி அதிகாரிகள்,முகாமைத்தவஉதவியாளர்கள் உட்பட 17 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.இது தொடர்பாக மேலதிக விபரங்கள் கிழே வரைபு 6 இல் தரப்பட்டள்ளன.

**வரைபு 6: அனுமதித்த மற்றும் உண்மையில் காணப்படும் ஆளணி**




நிதி ஆணைக்குழு அதிகாரிகளின் கல்வித் தகைமைகளகீழே அட்டவணை 10 மற்றும் வரைபு 7 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 10: நிதி ஆணைக்குழு அதிகாரிகளின் கல்வித் தகைமைகள் - 2017**

| | பட்டப் படிப்பு | பட்டப் பின் படிப்பு | டிப்ளோமா | தொழிற் தகமைகள் |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 10 | 7 | 3 | 1 |
| நிறைவேற்றுத் தரமல்லா ஆளணியினர் | 20 | 11 | 5 | 1 |
| **Total** | **30** | **18** | **8** | **2** |

**வரைபு 7: தொழிற்பாட்டு ஆளணியின் கல்வித் தகைமைகள் - 2017**



நிதி ஆணைக்குழுவின் அனைத்து பதவி நிலை ஆளணியினரும் ஆரம்ப நிலை பட்டம் பெற்றவர்களாவர். இவல்களில் 7 பேர் பட்ட பின்படிப்பை பூர்த்திசெய்துள்ளனர். பதவிநிலையல்லா ஆளணியினரில் 20 அதிகாரிகள் ஆரம்ப நிலை பட்டம் பெற்றுள்ளதோடு 11 பேர் பட்ட பின் படிப்பு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளனர்.

### 3.4.3. அதிகாரிகளின் திறன் அபிவிருத்தி

**வெளிநாட்டுப் பயிற்சிகள் - 2017**

நிதி ஆணைக்குழுவானது தனது ஊழியர்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்களில் திறன் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை அளிக்கின்றது. 2017 ஆம் ஆண்டில் கீழ்வரும் அதிகாரிகள் வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றியுள்ளனர்.

**அட்டவணை 11: வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோர் -2017**

| இல | பெயர் மற்றும் பதவி | நிகழ்ச்சித்திட்டம் | நாடு |
|---|---|---|---|
| 01 | திரு. பீ.ஆர்.என். சுஜீவ (உதவிப் பணிப்பாளர்) | 2017- தென்பசுபிக் மற்றும் கரிபியன் நாடுகளுக்கான பொது நிதி முகாமைத்துவக் கருத்தரங்கு. | சீனா |
| 02 | திரு. டீ.ஏ.எஸ் சந்திர குமார (நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகள்) | 2017- தென்பசுபிக் மற்றும் கரிபியன் நாடுகளுக்கான பொது நிதி முகாமைத்துவக் கருத்தரங்கு. | சீனா |
| 03 | திருமதி. டீ.பீ.ஈ.என். குணசேகர (உதவிப் பணிப்பாளர்) | ஒரு தீரு ஒரு பாதை நாடுகளின் மக்களின் வாழ்வாதாரம்-2017 | சீனா |
| 04 | திருமதி ஈ.எச் எம் டீ ஹேரத் (நிகழ்ச்சித்திட்ட அதிகாரி) | ஒரு தீரு ஒரு பாதை நாடுகளின் மக்களின் வாழ்வாதாரம்-2017 | சீனா |
| 05 | ஏ.டீ.எம்.பீ.டீ தென்னகோன் (செயலாளர்) | உள்ளூராட்சி மன்றங்களின் சேவை வழங்கலில் பெண்களின் பங்களிப்பு, அறிவு பரிமாற்றம் இலங்கை குழு, கேரளா, இந்தியா | இந்தியா |

# 4. நடவடிக்கைகளும் மற்றும் அடைவுகளும்

2017 ஆம் ஆண்டின் நிதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளும் பெறுபேறுகளும் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.

## 4.1. தேவை மதிப்பீடு

நிதி ஆணைக்குழுவானது மாகாண சபைகள் தமது 2018 ஆம் ஆண்டுக்கான மூலதன மற்றும் மீண்டெழும் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்கியது.

மாகாண சபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் நிதிக் கோரிக்கைகளானது ஆணைக்குழுவினால் மிகவும் கவனமாக பரிசீலிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட பின்பே அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் அபிவிருத்தி கொள்கை, பொதுச் செலவு முகாமைத்துவம், மாகாண சபைகளின் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டம் மற்றும் மாகாணங்களின் கடந்த கால பொது நிதிச் செலவு செயலாற்றுகை என்பனவும் கருத்திற் கொள்ளப்படும்.

மாகாண சபைகளின் மூலதனத் தேவைகள் மதிப்பீடு செய்யப்படும் போது ஆணைக்குழுவினது தேசிய அபிவருத்திக் கொள்கை மற்றும் மாகாண சபைகளின் நடுத்தர காலத் திட்டம் என்பவற்றின் கீழ் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

- பிராந்தியத்திற்குள்ளும் மற்றும் பிராந்தியங்களுக்கிடையிலும் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
- மாகாணங்களில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களின் மூலம் உயர்ந்த பட்சப் பயன்பாடு.
- திறனான சேவை முன்னேற்றம்.
- திட்டமிடப்பட்ட பெறுபேறுகளை அடையப் பெறல்.
- வளங்களின் வீண் விரயம் மற்றும் வேலைகளின் இரட்டிப்பைத் தடுத்தல்.
- முன்னுரிமைத் தேவைகள்.
- மாகாண நிறுவகங்களின் திறன் அபிவிருத்தி.
- விடயப் பரப்பு மற்றும் பொருத்தப்பாடு.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்.

மீண்டெழும் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்யும் போது நிதி ஆணைக்குழுவானது பின்வரும் கோட்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும்.

- அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி.
- உண்மையாக உள்ள ஆளணி மற்றும் மாகாணத்தின் பதவி வெற்றிடங்கள்.
- மாகாண சபைகளுக்கு வரிசை அமைச்சுக்களினால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள புதிய நியமனங்கள்.
- தனியாள் வேதனங்கள், சம்பள நிலுவைகள், மற்றும் ஊழியர் கடன்கள் என்பவற்றின் மதிப்பீடு.
- ஏனைய மீண்டெழும் செலவுகளின் மதிப்பீடு மூலதன சொத்துக்களின் பராமரிப்பு உள்ளடங்கலாக.
- தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள்.
- உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான மாற்றல்கள்.
- உரிய அரச சுற்றுநிரூபங்கள்.

## நிதி ஆணைக்குழுவின் தகவல் தளம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை

நிதி ஆணைக்குழுவுக்கான தரவுத்தளம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை என்பன ஆணைக்குழுவின் ஆணையை அமுல்படுத்தல் மற்றும் அதன் பிரதான தொழிற்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாததொன்றாகும்.இத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக நிதி ஆணைக்குழு மற்றும் தகவல் தொடர்பு முகவராண்மை நிறுவனத்துடன் பல சுற்றுக்களாக கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. எவ்வாறாயினும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தில் இடம் பெற்ற மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக எந்தவொரு சாதகமான முன்னேற்றத்தையும் அடைந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, நிதி ஆணைக்குழுவானது தகவல் மற்றும் தொடர்பாடல் முகவராண்மையைக் கைவிட்டுவிட்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனித்துறைக் கல்லூரியுடன் கலந்துரையாடல்களை இது தொடர்பில் ஆரம்பித்துள்ளது.இதற்கு ஆசிய பவுண்டேஷன் நிதி உதவியளிக்கின்றது.

## ஆராய்ச்சிக் கற்கைகள்

நிதி ஆணைக்குழவின் தீர்மானம் மேற்கொள்ளுதல் செயன்முறைக்கு உதவும் வகையில் ஒரு பொருத்தமான தரவு மையத்தை பராமரித்தல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக வேண்டி ஒரு ஆராய்ச்சிப் பிரிவு உருவாக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு உதவக்கூடிய வகையில் பல விசேடமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்வருவன உள்ளடங்கலாக

- மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான ஆய்வு
- சுகாதாரத்துறை மீதான செலவுகள் தொடர்பான ஆய்வு
- மாகாண சபைகளுக்குக் கீழ் இயங்கும் அதிகார சபைகள் தொடர்பான ஆய்வு
- 2006-2016 ஆண்டு காலப்பகுதியில் மாகாண சபைகளின் வருமான சேகரிப்பின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வு.
- 2015 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கிடையில் மீண்டெழும் செலவுகள் தொடர்பான ஆய்வு
- 2015 ஆம் ஆண்டில் பிரதான துறைகள் மீதான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.
- இலங்கையில் அரச மட்டங்களில் காணப்படும் நிதித்துறை சார்பான உறவுகள் தொடர்பான ஆய்வு
- மாகாண வீதிப் பராமரிப்புச் செலவு மற்றும் பராமரிப்புச் செலவினை ஈடுசெய்வதற்கான முறைமை.
- மாகாண சபை, மாகாண சபைகளின் அதிகார சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி.
- தெரிவு செய்யப்பட்ட சில மாநகர சபைகள் தொடர்பான ஆய்வு
- மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள மூலதன நிதியினை பயன்படுத்தல் தொடர்பான ஆய்வு.
- மாநகர சபைகளில் காணப்படுகின்ற வருமான சமமின்மை தொடர்பான ஆய்வு

சமமான பிராந்திய அபிவிருத்திக்கான கொள்கைப் பரிந்துரைதொடர்பிலான தகவல்களை சேகரிப்பதற்கான இணைந்த பயிற்சியினை நிதி ஆணைக்குழுவானது இலங்கை மத்திய வங்கி மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் ஆகியவற்றினது கூட்டான பங்களிப்புடன் மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆய்வுச் சுற்றுலா

- நிதி ஆணைக்குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகள் தெஹிவலை-கல்கிஸ்ஸை மாநகர சபை மற்றும் கஸ்பேவ நகர சபைக்கும் விஜயங்களை மேற்கொண்டனர். இவ்விஜயத்தின் நோக்கம் மாநகர சபையின் கட்டமைப்பு, கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில், செலவு மற்றும் வருமானம் மதீப்பீடு, வரவு- செலவுத் திட்டம், வருமானம் சேகரிப்பு, அபிவிருத்தித் திட்டங்கள்,நூலக முகாமை, உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை முகாமை செய்தல், முன்பள்ளிக் கல்வி, சமூகநல நடவடிக்கைகள், சேமிப்புக்கள், முதலீடுகள் மற்றும் ஆளணி முகாமைத்துவம் என்பவற்றை ஆய்வு செய்வதாகும்.

 

### விஷேட விரிவுரைகள்

ஆணைக்குழுவின் அதிகாரிகளின் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் ஒரு தொடர்ச்சியான செய்முறையாக இவ்வருட காலப்பகுதியில் பல விரிவுரைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- "திரு சுனிச்சிரோ கொண்டா" ஜய்கா நிறுவன ஆலோசகர் " ஜப்பானிய உள்ளூராட்சி முறைமை" தொடர்பாகவும் விசேடமாக நிதியீட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு ஒரு மேல்ஆய்வினை முன்வைத்தார்.

- லோவா பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுனருமான கலாநிதி எச். என். தேநுவர அவர்கள் பொதுப் பொருளாதாரக் கொள்கை மற்றும் பொது நிதி தொடர்பாக ஒரு விசேட உரை நிகழ்த்தினார். இக்கலந்துரையாடலின் போது கொள்கையின் அவசியம், கொள்கை வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்தல், கொள்கையை ஏற்றுக் கொள்ளல், அரசாங்கத்தின் பொருளாதார தொழிற்பாடு என்பன கலந்துரையாடப்பட்டன.

- ஐக்கிய அமெரிக்க உதவு நிறுவனத்தின் கொள்வனவு,அரசதுறை மற்றும் தனியார் துறை பங்குடமை ஆலோசகர் திரு சரத் முத்துகல அவர்கள் அரசதுறை மற்றும் தனியார் துறை பங்குடமை முயற்சிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம் பெற்றுள்ள தனியார்துறை முதலீடுகள் மற்றும் வழமையான நிதயீட்டம் மற்றும் அரச- தனியார் பங்குடமைகளுக்கு இடையிலான உத்தியிலும் மற்றும் அரச தனியார் முயற்சிகள் பல்வேறுபட்ட அடிப்படைக் காரணிகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

- திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி மஹீன் மென்டிஸ் அவர்கள் நிதி ஆணைக்குழுவின் சிறப்பான செயற்பாட்டிற்கு நல்லாட்சியின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறினார்.

 

**தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் உயர்ந்தபட்ச ஒருங்கிணைப்பினூடாக அபிவிருத்தி செய்முறையினை மேம்படுத்தல் தொடர்பான கருத்தரங்கின் பின் தொடர்ச்சி நடவடிக்கைகள்.**

தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் உயர்பட்ச ஒருங்கிணைப்பினை உருவாக்குவதனூடாக அபிவிருத்தி செய்முறையினை மேம்படுத்துதல் என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் சிபாரிசுகள் ஜனாதிபதி செயலகத்தின் விசேட ஒத்துழைப்பின் காரணமாக தொடர்ந்தும் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது.

இக்கருத்தரங்கின் சிபாரிசுகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதியின் செயலாளரினால் 2017 ஆம் ஆண்டில் இரண்டு கூட்டங்கள் கூட்டப்பட்டன. இக்கூட்டங்களில் உரிய அமைச்சுக்களின் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களினது பிரதிநிதிகளும் பங்குபற்றினர். ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளின் பேரில் நிதி ஆணைக்குழுவானது இது தொடர்பான முன்னேற்றங்களை மீளாய்வு செய்கின்றது.

**அனைத்து நிறுவனங்களுக்குமிடையிலான தொடர்பு**

உரிய அனைத்து நிறுவனங்களுடனும் சிறப்பான தொடர்புகளை கட்டியெழுப்புவது நிதி ஆணைக்குழுவின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு இன்றியமையாததொன்றாகும்.

நிதி ஆணைக்குழுவினது 2017 ஆம் ஆண்டில் ஜனாதிபதியின் செயலகம், அரசியலமைப்புச் சபை, அரசியலமைப்பு கற்கைகளுக்கான நிறுவனம், நிதி மற்றும் ஊடக அமைச்சு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவகம், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம், சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு, போன்ற பல நிறுவனங்களுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களை மேற்கொண்டன. இதன் மூலம் நிதி ஆணைக்குழுவிற்கும் இந்நிறுவனங்களுக்குமிடையிலான புரிந்துணர்வு மேலும் முன்னேற்றமடைந்துள்ளதுடன் சேவை வழங்கலிலும் ஓர் உயர்வைக் கண்டுள்ளது.

**மாகாண கணக்காய்வு அறிக்கையின் நிதித்துறையினது சிறப்பம்சங்கள்**

கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 54(1) சரத்தின் பிரகாரம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தின் 23(1) வகுதியின் கீழ் மாகாண சபைகளின் நிதி அறிக்கைகளை கணக்காய்வு செய்து மாகாண சபைகளின் ஆளுனர்களுக்கு சமர்ப்பிப்பார். நிதி ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப ஆளுனர் அக்கணக்காய்வு அறிக்கையினை மாகாண சபைக்குச் சமர்ப்பிப்பார். கணக்காய்வு அறிக்கையானது அதன் அவதானிப்புக்கள் மற்றும் கருத்துக்களுடன் மாகாண பொதுக் கணக்கு குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
கணக்காய்வு நாயகத்திடமிருந்து நிதி ஆணைக்குழுவானது கணக்காய்வு அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு அதனை மீளாய்வு செய்து அது தொடர்பில் தமது அவதானிப்புக்களை நிதி ஆணைக்குழுவானது மாகாண ஆளுனர், கணக்காய்வாளர் நாயகம், மாகாண பிரதம செயலாளர் ஆகியோருக்குச் சமர்ப்பிக்கும். 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் கணக்காய்வு அவதானிப்புக்களை முன்வைத்திருந்தார். அவற்றிற் சில கீழ் வருமாறு:-

1. தற்போதுள்ள சட்டம், நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமை அல்லது பின்பற்றாமை.
2. வருமான முகாமைத்துவக் குறைபாடுகள்
3. திறனற்ற முகாமைத்துவம்
4. திறனற்ற செயலாற்றுகை
5. சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்
6. பயன்படுத்தப் படாநிதி
7. சொத்துக்கள் பயன்படுத்தப் படாமை மற்றும் குறைபாவனை
8. மனிதவள முகாமை தொடர்பான பிரச்சினைகள்
9. முறையற்ற வாகனப் பயன்பாடு
10. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகள்.

கணக்காய்வு அறிக்கையின் படி முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் பின்வரும் விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

- கணக்கியல்
- நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
- வருமான நிருவாகம்.
- ஒப்பந்த முகாமைத்துவம்
- மனிதவள முகாமைத்துவம்
- கடன்படுநர் மற்றும் கடன்கொடுநர் கட்டுப்பாடு

## 4.2. சிபாரிசுகள் மற்றும் நிதிப் பகிர்வும்

நிதி ஆணைக்குழுவானது நிதிப் பங்கீடு தொடர்பான 2018 ஆம் ஆண்டுக்கான மும்மொழியிலுமான சிபாரிசுகளை 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதியில் ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தது. பிற்பாடு அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் அமைச்சரவை அனுமதியைப் பெற்று பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பித்ததுள்ளார்.

நிதிப் பங்கீடு தொடர்பில் முக்கியமான சிபாரிசுகள் பின்வருமாறு:-

- நிதி ஆணைக் குழுவின் பிரதான கடமைப்பாட்டினைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு முதலில் மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் மொத்த ஒதுக்கத்தினைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் தற்போதைய நடைமுறையின் கீழ் மாகாணங்களுக்கான மொத்த ஒதுக்கத்தினை தீர்மானிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதில்லை. ஆகவே,நடைமுறை மதிப்பீட்டு முறையினை மீளாய்வு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.
- அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விடயங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் வரிசை அமைச்சுக்களினால் அடையாளம் காணப்படும் கருத்திட்டங்களுக்கான நிதியானது மாகாண சபைகளுக்கூடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறான கருத்திட்டங்கள் மாகாண சபைகளினூடாகவே அமுல்படுத்தப்படல் வேண்டும்.
- அதிகாரப் பரவலாக்கலை வலுவற்றதாக்காமல் தேசிய மற்றும் மாகாண திட்டமிடலுக்கு ஒரு பொதுவான திட்டமிடல் சட்டத்தை உருவாக்குதல்.
- பிராந்திய மட்டத்தில் முதலீடுகள் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல் பறிமாற்றத்தினை உறுதிப்படுத்தி அரச மடடங்களுக்கிடையில் சிறப்பான நிதி தொடர்பை உருவாக்குதல்
- மாகாண சபைகளின் மனிதவலு மேம்பாட்டிற்கு அதிகூடிய முக்கியத்துவம் அளித்தல்
- மாகாண வருமானத்தை அதிகரிப்பதற்கு புதிய மூலங்களை அடையாளம் காணல்
- மாகாணங்களிலுள்ள இளைஞர் படையின் திறன்களை விருத்தி செய்தல்
- தெரிவு செய்யப்பட்ட சில பிராந்தியங்களில் தனியார்துறை முதலீட்டினை ஊக்குவிப்பதற்கு விசேட சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தல்

**மாகாணங்களுக்கு நிதியினை ஒதுக்கீடு செய்தல் மற்றும் மாகாணங்களுக்கான செலவுகள்**

அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதியினை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிப்பதனூடாக நிதி ஆணைக்குழுவானது அதிகாரப் பரவலாக்கலைச் செயலூக்கம் பெறச் செய்கின்றது. இதன் மூலம் மாகாண சபைகளைசிறப்பான அபிவிருத்தித் திட்டமிடலுக்குவழி காட்டுகின்றது. நிதி ஒதுக்கீடுச் செயன்முறையின் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.

**வரைபு 8: நிதி வள ஒதுக்கம்**




## மூலதன நிதி

### மாகாண சபைகளுக்கு நிதியினைப் பகிர்தளித்தல்

மாகாண சபைகளுக்கான கொடைகளானது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். நிதி ஆணைக்குழுவானது மாகாண சபைகளினால் முன்வைக்கப்படும் வருடாந்த மாகாண நிதித் தேவைகளானது அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் மாகாண சபைகளின் நடுத்தர மற்றும் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களையும் கருத்திற் கொண்டு மீளாய்வு செய்யப்படும்.

இரண்டாவது கட்டமாக நிதி ஆணைக்குழுவானது 2017 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதித் தேவைகளானது 2018 ஆம் ஆண்டிற்கான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காகப் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. திறைசேரியானது மொத்த தொகையாக ரூபா 12,026 மில்லியன்களை மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையாகவும்(PSDG)ரூபா 4,000 மில்லியன்களை பிரமாண அடிப்படைக் கொடை (CBG) ஆகவும் ஒதுக்கியது. நிதி ஆணைக்குழுவானது இத்தொகைகளினை முதன்மை அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட துறைகளுக்காகப் பங்கீடு செய்து கொடுக்கும். நிதி ஆணைக்குழுவானது துறைகளுக்கான நிதி ஒதுக்கத்தினை தீர்மானிக்கும் போது மாகாண சபைகளின் கருத்து மற்றும் துறைகளுக்கான கடந்த வருட ஒதுக்கத்தையும் கருத்திற் கொள்ளும். மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை மற்றும் பிரமாண அடிப்படையிலான கொடை ஆகிய இரு மூலதன நிதி ஒதுக்கங்களின் போது நிதி ஆணைக்குழுவினால் ஒரு புள்ளிவிபரவியல் முறைமை ஒன்று பயன்படுத்தப்பட்டது. இதன் போது தொகை மதீப்பீடு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம் நிதி ஆணைக்குழுவிற்கு உதவியாக இருந்தது. மாகாணங்களுக்கிடையிலான மூலதன நிதியை பங்கீடு செய்வதற்கான சூத்திரத்தினைத் தயாரிக்கும் போது பின்வரும் காரணிகள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

- ஒவ்வொரு மாகாணத்தினதும் 2015 ஆம் ஆண்டிற்கான சனத்தொகை
- 2012-2013 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான மாகாண தலா வருமானம்
- 2014 ஆம் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தியில் மாகாணத்தின் பங்களிப்பு
- 2013 ஆம் ஆண்டில் மாகாணத்தின் சனத்தொகைக்கான மருத்துவ அதிகாரிகளின் எண்ணிக்கை.
- 2015 ஆம் ஆண்டில் மாகாணத்தின் அடிப்படையில் விஞ்ஞானப் பிரிவில் (மாகாண மட்ட%) பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்ற பரீட்சாத்திகளின் எண்ணிக்கை.

மாகாணங்களக்கிடையில் நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பிற்பாடு வெவ்வெறான துறைகளுக்கான நிதியானது தீர்மானிக்கப்படும். இதன்போது மாகாண சபைகளினால் முன்வைக்கப்படும் துறைகளுக்கான நிதியளிப்பானது நிதி ஆணைக்குழுவினால் கருத்திற்உகாள்ளப்படும்.

### வருமானம் சேகரிப்பு ஊக்குவிப்புக் கொடை

மாகாண சபைகளில் வருமானச் சேகரிப்பினை ஊக்கப்படுத்தும் வகையில் நிதி ஆணைக்குழுவானது "வருமானம் சேகரிப்பு அடிப்படையிலான கொடை" என்ற புதிய கொடை முறையொன்றை பரிந்துரை செய்துள்ளது. இது அபிவிருத்தியை நோக்காக் கொண்டது. வருமானம் அதிகரிப்புக்கேற்ப இக்கொடையும் அதிகரித்துச் செல்லும். இக்கொடையினை தாம் விரும்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த மாகாண சபைகளுக்கு அதிகாரம் உள்ளது.

### மூலதன நிதிப்பங்கீடு-2018

**அட்டவணை 12: மூலதன நிதிப் பங்கீடு- 2018**

(ரூபா.மில்)

| மாகாணம் | பி.அ.கொ | மா.கு.அ.கொ | உப மொத்தம் | மாகாண பங்கின் % | வெளி நாட்டு நிதியீட்ட கருத்திட்டங்கள் | மொத்தம் | மாகாண பங்கின் % |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 254.40 | 1,306.10 | 1,560.50 | 6.36 | 408.00 | 1,968.50 | 6.94 |
| மத்திய | 388.80 | 1,996.11 | 2,384.91 | 9.72 | 425.00 | 2,809.91 | 9.91 |
| தெற்கு | 388.40 | 1,994.05 | 2,382.45 | 9.71 | 413.00 | 2,795.45 | 9.86 |
| வடக்கு | 551.20 | 2,829.87 | 3,381.07 | 13.78 | 442.00 | 3,823.07 | 13.48 |
| வட மேல் | 408.40 | 2,096.73 | 2,505.13 | 10.21 | 419.00 | 2,924.13 | 10.31 |
| வட மத்திய | 481.60 | 2,472.54 | 2,954.14 | 12.04 | 439.00 | 3,393.14 | 11.97 |
| ஊவா | 559.60 | 2,873.00 | 3,432.60 | 13.99 | 423.00 | 3,855.60 | 13.60 |
| சப்ரகமுவ | 454.00 | 2,330.85 | 2,784.85 | 11.35 | 415.00 | 3,199.85 | 11.29 |
| கிழக்கு | 513.60 | 2,636.83 | 3,150.43 | 12.84 | 431.00 | 3,581.43 | 12.63 |
| **மொத்தம்** | **4000.00** | **20,536.08** | **24,536.08** | **100** | **3,815.00** | **28,351.08** | **100** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

அட்டவணை 12 ஆனது ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை,பிரமாண அடிப்படைக் கொடை மற்றும் வெளிநாட்டு நிதிக்கருத்திட்டங்கள் என்பவற்றின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகையினைக் காட்டுகின்றது. இதன் அடிப்படையில் ஊவா மாகாணத்துக்கு அதிகூடிய தொகை ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை மேல் மாகாணத்திற்கே குறைந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளது உரிய மாகாண பங்குகளானது முறையே 13.60 மற்றும் 6.94 ஆகும்.

**வரைபு 9: மூலதன செலவினம் 2016-2017**




| | நிதி ஆணைக்குழுவின் ஒதுக்கம் | மேலதிக ஒதுக்கம் | மொத்த ஒதுக்கம் | மொத்த பெறுகைகள் | உண்மையானசெலவினம் |
|---|---|---|---|---|---|
| 2016 | 31025.50 | 1709.68 | 32735.18 | 15170.12 | 24771.90 |
| 2017 | 16026.00 | 20344.60 | 36370.60 | 23486.38 | 28397.44 |

**மூலம்: நிதி ஆணைக்குழுஇ திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் மற்றும் மாகாண சபைகளின் மாதாந்த செலவு அறிக்கை**

வரைபு 9 ஆனது 2016 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதி, மாகாண சபைகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகை மற்றும் மெய் செலவினம் விளக்கப்படுகின்றது. ஆரம்பமாக நிதி ஆணைக்குழுவினால் ரூபா 16,026 மில்லியன் அனைத்து மாகாணங்களுக்கும் ஒதுக்கப்பட்டது. பொதுத் திறைசேரியானது கடந்த வருட நிலுவைகளை செலுத்துவதற்காக மேலதிகமாக ரூபா 20,344.60 மில்லியன்களை பெற்றுக் கொடுத்தது. மொத்த மூலதன ஒதுக்கம் ரூபா 36,370.6 மில்லியனாகும். இம் மீளாய்வுக்கு உட்பட்டுள்ள காலப்பகுதியில் மொத்த மூலதன ஒதுக்கமானது 11% அதிகரிப்பனைக் காட்டுகின்றது.

## மீண்டெழும் செலவு

### மீண்டெழும் தேவைகளுக்கான கொடைகள்

மாகாண சபைகளின் சேவை வழங்களை மேற்கொள்ளும் நோக்குடன் மீண்டெழும் செலவுகளுக்காக மொத்தக் கொடை வழங்கப்படுகின்றன. இது நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்ட மொத்த நிதியில் 86 சதவீதமாகும். மீண்டெழும் செலவுகளுக்கான ஒதுக்கமானது மாகாண சபைகளின் தொழிற்பாட்டுக்கு மட்டுமல்லாமல் மாகாண மட்டத்தில் அரசாங்க சேவைகளுக்குமாகும். அட்டவணை-13 மாகாண சபைகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரச வரவு-செலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்பட்ட மொத்தக் கொடை விபரிக்கப்படுகின்றது.

**அட்டவணை 13: மொத்தக் கொடை பங்கீடு 2017-2018**

(ரூபா.மில்)

| மாகாணம் | 2017 | | | 2018 |
|---|---|---|---|---|
| | ஆரம்ப மொத்த கொடை | பற்றாக்குறை ஒதுக்கம் | மொத்த ஒதுக்கம் | ஆரம்ப மொத்த கொடை |
| (1) | (2) | (3) | (4)=(3)+(2) | (5) |
| மேல் | 14,867 | 224 | 15,091 | 14,261 |
| மத்திய | 22,489 | 831 | 23,320 | 25,383 |
| தெற்கு | 19,204 | 1,829 | 21,033 | 22,858 |
| வடக்கு | 16,477 | 601 | 17,078 | 18,651 |
| வட மேல் | 21,587 | 279 | 21,866 | 21,991 |
| வட மத்திய | 13,526 | 303 | 13,829 | 14,707 |
| ஊவா | 15,899 | 216 | 16,115 | 15,711 |
| சப்ரகமுவ | 19,195 | 155 | 19,350 | 21,441 |
| கிழக்கு | 17,361 | 1,318 | 18,679 | 19,751 |
| **மொத்தம்** | **160,605** | **5,755** | **166,360** | **174,755** |

*மூலம்: நிதி ஆணைக்குழு மற்றும் மாகாண சபைகளுக்கான கட்டு நிதி விடுவிப்பு*

2017 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட மொத்தக் கொடையானது ரூபா 160,605 மில்லியன்களாகும். இதற்கு மேலதிகமாக பற்றாக்குறை நிதி ஒதுக்கமாக வழங்கப்பட்ட ரூபா. 5,755 உடன் மொத்த கொடையானது ரூபா 166,360 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. இத்தொகையுடன் 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப ஒதுக்கமான ரூபா 174,755 மில்லியன்களை ஒப்பீடு செய்யும் போது 2018 இல் மொத்தக் கொடையானது 5.05 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக இவ்வட்டவணையின் படி 2017 இல் மத்திய மாகாண சபையானது அதிகூடிய மொத்தக் கொடையை பெற்றுக் கொண்டுள்ளதுடன் வடமத்திய மாகாண சபை குறைந்த ஒதுக்கத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

### அட்டவணை 14: மீண்டெழும் செலவுகளின் நிதியீட்டம் மற்றும் பாவனை 2010–2017

(ரூபா.மில்)

| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மா.சபைகளுக்கான ஆணைக்குழுவின் சிபார்சு | 123,430 | 130,063 | 145,617 | 160,211 | 184,112 | 223,387 | *234418 | 245,926 |
| திறைசேரி ஒதுக்கம் | 123,430 | 130,068 | 145,617 | 160,211 | 183,396 | 231,553 | *237194 | 251,681 |
| உண்மையாக கிடைத்த நிதி | 121,805 | 142,108 | 142,234 | 158,853 | 187,563 | 235,256 | 247,718 | 250,113 |
| உண்மையான மீண்டெழும் செலவு | 122,390 | 131,086 | 131,086 | 155,269 | 170,961 | 216,158 | 231,143 | 240,383 |

*மூலம்: நிதி ஆணைக்குழு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் மாகாண சபைகளுக்கான கட்டு நிதி விடுவிப்பு. மற்றும் மாகாண சபைகளின் மாதாந்த செலவு அறிக்கை*

### வரைபு 10: மொத்தக் கொடை நிதியீட்டம் மற்றும் அதன் போக்கு 2010 - 2017




2010-2017 காலப்பகுதியில் மொத்தக் கொடைகளுக்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையான ரூபா 234,418 மில்லியனில் இருந்து ரூபா 245,926 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. இது 5 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில் பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட தொகையும் ரூபா 237,194 மில்லியனிலிருந்து ரூபா 251,681 மில்லியன்களாக அதிகரித்துள்ளதோடு 6.5 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. இக்குறிப்பிட்ட காலப்பகுதியில் மாகாண சபைகளின் உண்மையான செலவுகளும் 4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. 2017 ஆண்டில் மொத்தக் கொடையுடன் தொடர்புபடும் உண்மையான செலவினம் ரூபா 240,383 மில்லியன்களாகும். இவ்வதிகரிப்பானது பிரதானமாக வேதனங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகளில் ஏற்பட்டதாகும்.

வரைபு-11 ஆனது மொத்தக் கொடை தொடர்பில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் பொது திறைசேரியின் ஒதுக்கம் தொடர்பான தகவல்களை பிரதிபலிக்கின்றது.

**வரைபு 11 : மீண்டெழும் செலவுஒதுக்கமமற்றும நிதி ஆணைக்குழுவின் சிபார்சு**




| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|
| நிதி ஆ.குழு பரிந்துறைக்கப்பட்டது | 5.4 | 12 | 10 | 14.9 | 21.3 | 5 | 5 |
| திறைசேரி ஒதுக்கம் | 5.4 | 12 | 10 | 14.5 | 26.3 | 2.4 | 6.1 |

மேலே வரைபு 11 ஆனது 2011-2017 வரையான காலப்பகுதியில் நிதி ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட தொகை மற்றும் பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட தொகையும் அதிகரித்துச் செல்லும் சதவீதத்தை விளக்குகின்றது. இக்காலப் பகுதியில் நிதி ஆணைக்குழுவின் சிபாரிசும் திறைசேரியின் ஒதுக்கங்களும் ஓரளவு சமமாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் சிபார்சு மற்றும் ஒதுக்கத்திற்கிடையில் குறிப்பிடும்படியான வித்தியாசத்தைக் காண முடிகின்றது. அது பிரதானமாக நிதி ஆணைக்குழுவின் சிபாரிசுகள் சமர்ப்பிக்கபட்டதன் பின்பு ஏற்பட்ட சம்பள அதிகரிப்பின் காரணமாக உருவானதாகும். 2016 ஆம் ஆண்டிற்கான திறைசேரி ஒதுக்கமானது நிதி ஆணைக்குழுவின் சிபார்சினை விட குறைவானதாகும். எவ்வாறாயினும், மேலதிக பற்றாக்குறை ஒதுக்கத்தின் பின்பு திறைசேரி ஒதுக்கமானது நிதி ஆணைக்குழுவினால் ஆரம்பத்தில் சிபாரிசு செய்யப்பட்ட தொகையை விட அதிகமானதாகும்.

## மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் கீழ் பிரதான துறைகளின் மீது மாகாண முதலீடுகள்

இப்பகுதியானது மாகாண அடிப்படையில் பிரதான ஐந்து துறைகளில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீட்டை மீளாய்வு செய்கின்றது.

### கல்வித்துறை

“இலங்கையின் அடையாளத்தை உலகளாவிய ரீதியில் எடுத்தச் செல்லக்கூடிய முழுமையான பிரஜைகளை உருவாக்கி உலகளாவிய ரீதியில் தனிச்சிறப்பு நிலையை அடைதல்” என்பதே கல்விக் கொள்கைகளை தீர்மானிக்கும் கல்வி அமைச்சின் தூரநோக்காகும். ஆகவே மாகாண சபைகளும் கட்டாயம் இக்கொள்கைகளுடன் இணைந்து செயற்படல் வேண்டும்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் நான்காவது “தரமான கல்வி” பற்றி விளக்குகின்றது. இவ் இலக்கானது சமமான கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் வாழ்க்கையில் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதாகும். இதன் அடிப்படையில் குறிக்கோள்களாவன:-

- ஒவ்வொரு ஆண் மற்றும் பெண் குழந்தைக்கும் தரமான ஆரம்ப மற்றும் இரண்டாம் தரக் கல்வியினைப் பெறும் வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல்.
- ஒவ்வொரு ஆண் மற்றும் பெண் குழந்தைக்கும் தரமான முன்பருவ அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்

கல்வித்துறையில் பௌதீக மற்றும் மனித வளங்களின் விருத்தியானது திறனான கற்றல் மற்றும் கற்பித்தல் செய்முறையில் வினைத்திறனை எதிர்பார்த்தே மேற்கொள்ளப்படுகின்றது. மூலதன ஒதுக்கங்களைப் பயன்படுத்தி போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல் ( உதாரணமாக அனைத்து வசதிகளையும் உடைய பாடசாலைகள், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்வி நிர்வாக நிறுவனங்கள்).

மாகாணக் கல்வி அதிகாரிகள் தமது கவனத்தை முன்பள்ளிக் கற்றல், ஆரம்ப கல்வி மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் செலுத்துவதோடு உயர்கல்வித் துறையை மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் விட்டுவிடல் வேண்டும். பாடசாலையை விட்டு வெளியேறுவோருக்குத் தேவையான தொழிற்கல்வி மற்றும் திறன் அபிவிருத்திப் பயிற்சிகளை வழங்கும் பொறுப்பு மாகாண சபைகள் மற்றும் ஏனைய தேசிய நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டும்.

ஒரு பிரதான சேவை வழங்கல் துறையாக மாகாண கல்வித் துறையானது மாகாண மூலதன வரவு-செலவு திட்டத்திலிருந்து வருடாவருடம் பின்வரும் தொகையினைக் கல்விக்காக முதலீடு செய்துள்ளது.

**அட்டவணை 15: மாகாண மட்டத்தில் கல்வித் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)**

(ரூபா.மில்)

| மாகாணம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மேல் | 176 | 176 | 108 | 976 | 164 |
| மத்திய | 112 | 139 | 129 | 871 | 175 |
| தெற்கு | 127 | 166 | 176 | 253 | 480 |
| வடக்கு | 247 | 260 | 278 | 583 | 530 |
| வட மேல் | 146 | 502 | 212 | 455 | 752 |
| வட மத்திய | 125 | 121 | 124 | 510 | 642 |
| ஊவா | 179 | 861 | 288 | 275 | 442 |
| சப்ரகமுவ | 203 | 336 | 247 | 325 | 660 |
| கிழக்கு | 128 | 167 | 193 | 299 | 587 |
| **மொத்தம்** | **1,315** | **2,561** | **1,755** | **4,547** | **4,432** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த செலவு அறிக்கை*

*குறிப்பு: மேலே உள்ள தொகைகள் விடய அமைச்சுக்களின் மூலமான,வெளிநாட்டு நிதி மூலமான திட்டங்கள் மற்றும் ஏனைய உள்ளூர் நிறுவனங்களின் செலவுகள் தவிர்ந்ததாகும்*

மேற்குறிப்பிட்ட தொகைகளானது வருடாந்தம் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைகளில் இருந்து முதலீடு செய்யப்பட்டதாகும். கடந்த இரு வருடங்களினை முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது மூலதனச் செலவானது இரு மடங்காக அதிகரித்துள்ளதையும் அவதானிக்கலாம்.

### சுகாதாரத்துறை

அண்மைக்கால சுகாதாரத்துறை குறியீடுகளின் பிரகாரம் இலங்கையின் சுகாதாரத்துறையானது பாரியளவில் முன்னேற்றமடைந்துள்ளதைப் பிரதிபலிக்கின்றது. இம் முன்னேற்றத்துக்கு மாகாண சுகாதார சேவையானது பெரும் அளவில் பங்களிப்புச் செய்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாண சபையானது அதிகூடிய தொகையை சுகாதார சேவைக்கு முதலீடு செய்துள்ளதோடு மத்திய மாகாண சபையானது 2016 ஆம் ஆண்டில் உயர்ந்த பட்ச தொகையினை முதலீடு செய்துள்ளது.

சுகாதாரத்துறை மீதான மொத்த முதலீட்டினை முழுமையாக நோக்குமிடத்து அண்மிய கடந்த இரண்டு வருடங்களில் அவை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 16: மாகாண மட்டத்தில் சுகாதாரத் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)**

(ரூபா.மில்)

| மாகாணம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மேல் | 155 | 127 | 172 | 548 | 119 |
| மத்திய | 166 | 180 | 30 | 651 | 262 |
| தெற்கு | 164 | 102 | 170 | 214 | 305 |
| வடக்கு | 188 | 209 | 283 | 438 | 497 |
| வட மேல் | 118 | 136 | 159 | 252 | 503 |
| வட மத்திய | 95 | 79 | 104 | 258 | 314 |
| ஊவா | 168 | 220 | 162 | 287 | 431 |
| சப்ரகமுவ | 178 | 203 | 433 | 444 | 848 |
| கிழக்கு | 117 | 150 | 175 | 248 | 505 |
| **மொத்தம்** | **1,349** | **1,406** | **1,687** | **3,703** | **3,782** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த செலவு அறிக்கை*

*குறிப்பு: 2013 – 2017 காலப்பகுதியில் மாகாணம் குறித்தொதுக்கிய நிதியிலிருந்தான சுகாதாரத்துறை மீதான முதலீடுகளானது 187% இனால் அதிகரித்துள்ளது.*

## வீதிகள் அபிவிருத்தி

வீதித்துறை மீதான முதலீடுகள் கீழே அட்டவணை 17 இல் தரப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இக்காலப்பகுதியில் மாகாண வீதி வலையமைப்பினை சிறப்பான முறையில் பராமரிப்பதற்காக ஏற்பாடுகள் செய்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இத்துறை மீதான முதலீடுகளானது, போக்குவரத்துக்கான நேரம், செலவு என்பன குறைவடைந்தமை, விவாசாயம் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு அதிகரித்தமை காரணமாக அனைத்துத் துறைகளினதும் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்துள்ளன.

மாகாண வீதி அபிவிருத்திப் பிரிவின் பிரதான பொறுப்பாவது சீ மற்றும் டீ வகுப்பு வீதிகளை நிர்மாணித்தலும் பராமரித்தலும் ஆகும். இதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பு (ஏ மற்றும் பீ வகுப்பு வீதிகள்) மற்றும் கிராமிய வீதி வலையமைப்புடன் தொடர்பினை உறுதி செய்வதாகும்.
மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையிலிருந்து மாகாண வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளுக்கான பிரத்தியேகமான நிதி ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படுவதோடு வருடாந்த வீதிப் பராமரிப்புக்காகவும் மீண்டெழும் செலவுகளிலிருந்தும் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 இல் முதல் 2015 காலப்பகுதியில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடையில் இருந்து அதிகூடிய ஒதுக்கம் வீதித்துறை மீதே மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்,ஊவா,சப்ரகமுவ, மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் வீதித்துறை மீதான முதலீடானது பெருமளவில் அதிகரித்திருப்பதை பிரதானமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**அட்டவணை 17: மாகாண மட்டத்தில் வீதித் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)**

(ரூபா.மில்)

| மாகாணம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மேல் | 490 | 474 | 375 | 276 | 145 |
| மத்திய | 401 | 431 | 291 | 469 | 176 |
| தெற்கு | 241 | 314 | 240 | 130 | 406 |
| வடக்கு | 207 | 102 | 150 | 320 | 202 |
| வட மேல் | 256 | 336 | 285 | 236 | 257 |
| வட மத்திய | 177 | 198 | 141 | 229 | 51 |
| ஊவா | 216 | 322 | 259 | 322 | 436 |
| சப்ரகமுவ | 242 | 336 | 551 | 287 | 506 |
| கிழக்கு | 129 | 146 | 60 | 184 | 257 |
| **மொத்தம்** | **2,359** | **2,659** | **2,352** | **2,452** | **2,435** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த செலவு அறிக்கை*

*குறிப்பு: மேலே உள்ள தொகைகள் விடய அமைச்சுக்களின் மூலமான,வெளிநாட்டு நிதி மூலமான திட்டங்கள் மற்றும் ஏனைய உள்ளூர் நிறுவனங்களின் செலவுகள் தவிர்ந்ததாகும்*

### விவசாயத்துறை

இலங்கையானது விவசாயத்துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கு முயற்சிக்கின்றது. இதன் மூலம் மக்களின் பொருளாதார நிலைமை, மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றது. 2014 ஆம் ஆண்டில் விவசாயத்துறை மீதான முதலீடுகள் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் தேசிய உணவு பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு மாகாணமும் விவசாயத்துறையில் உயர் அளவிலான முதலீட்டினை மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், 2017 ஆம் ஆண்டின் முதலீடானது 2016 தவிர்ந்த அண்மிய கடந்த காலங்களை விட மும்மடங்கு அதிகமானதாகும்.

**அட்டவணை 18: மாகாண மட்டத்தில் விவசாயத் துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)**

(ரூபா.மில்)

| மாகாணம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மேல் | 21 | 25 | 26 | 112 | 15 |
| மத்திய | 40 | 40 | 50 | 223 | 52 |
| தெற்கு | 21 | 40 | 44 | 82 | 196 |
| வடக்கு | 9 | 60 | 91 | 216 | 159 |
| வட மேல் | 37 | 48 | 53 | 131 | 168 |
| வட மத்திய | 24 | 42 | 54 | 159 | 78 |
| ஊவா | 92 | 50 | 50 | 144 | 299 |
| சப்ரகமுவ | 29 | 40 | 39 | 159 | 155 |
| கிழக்கு | 74 | 119 | 89 | 145 | 153 |
| **மொத்தம்** | **346** | **464** | **495** | **1,370** | **1,275** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த செலவு அறிக்கை*

*குறிப்பு: மேலே உள்ள தொகைகள் விடய அமைச்சுக்களின் மூலமான,வெளிநாட்டு நிதி மூலமான திட்டங்கள் மற்றும் ஏனைய உள்ளூர் நிறுவனங்களின் செலவுகள் தவிர்ந்ததாகும்*

### கால்நடை அபிவிருத்தி

விவசாயத்துறையுடன் இணைந்ததாக கால்நடைத்துறையும் கடந்த காலங்களில் குறிப்பிடும் படியான வளர்ச்சியைக் கண்டுள்ளது. அட்டவணை 19 ஆனது மாகாண அடிப்படையில் கால்நடைத்துறை மீது மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையில் இருந்து மேற்கொண்ட முதலீடுகளைக் காட்டுவதுடன் அது 2016 ஆண்டில் மொத்தமாக 793 மில்லியன்களுடன் உயர்ந்தபட்ச முதலீட்டைக் காட்டுகின்றது.எவ்வாறாயினும் 2016 இல் இருந்து 2017 காலப்பகுதியில் இத்துறைமீதான முதலீடானது 47 வீதத்தினால் குறைவடைந்துள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

**அட்டவணை 19: மாகாண மட்டத்தில் கால்நடை அபிவிருத்தி துறையில் மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையின் முதலீடு (2013-2017)**

(ரூபா.மில்)

| மாகாணம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மேல் | 15 | 15 | 16 | 85 | 12 |
| மத்திய | 25 | 27 | 32 | 137 | 35 |
| தெற்கு | 15 | 21 | 26 | 53 | 45 |
| வடக்கு | 13 | 29 | 44 | 111 | 79 |
| வட மேல் | 20 | 30 | 35 | 82 | 77 |
| வட மத்திய | 10 | 19 | 29 | 68 | 45 |
| ஊவா | 28 | 30 | 30 | 80 | 44 |
| சப்ரகமுவ | 24 | 40 | 31 | 68 | 21 |
| கிழக்கு | 29 | 38 | 52 | 110 | 101 |
| **மொத்தம்** | **179** | **248** | **293** | **793** | **459** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த செலவு அறிக்கை*

